Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

வெலா சலூன்
WELLA
Wella Hair Dressing
(குளிரூட்டப்பட்டது)
Haircuts, Facials, Stranghting
சலூனுக்கு தேவையான உபகரணங்கள் விற்பனைக்குண்டு.
இல,08, பருத்தித்துறை வீதி,
நல்லூர் மாக்கற்,
கல்வியங்காடு. T.P 0773144965

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆடி- 09 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஜ-ஆகிர் 17 (25.07.2005) திங்கட்கிழமை இதழ்:298

## தமிழர் தாயகத்துக்கு நேரடியாக சர்வதேசம் உதவிபுரிய வேண்டும்!

### அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கோரிக்கை

கொழும்பு —

சுனாமி மீளமைப்புக்கான பொதுக் கட்டமைப்பை இலங்கை அரசு தாமதப்படுத்தும் நிலையில், தமிழர் தாயகத்துக்கு நேரடியாக மனிதாபிமான உதவி மற்றும் நிதி உதவிகளை சர்வதேச சமுகம் அளிக்க வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

லண்டனில் தம்மைச் சந்தித்த நோர்வே குழுவினரிடம் அன்ரன் பாலசிங்கம் இது தொடர்பாக மேலும் கூறுகையில் -

சுனாமி மீள் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்காக ஆறு மாத காலம் பேசி பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

ஆனால், காணப்பட்ட இணக்கத்தின்படி பொதுக்கட்டமைப்பை இலங்கை அரசு அப்படியே நடைமுறைப்படுத்துமா என்பது சந்தேகத்துக்குரியதாகி விட்டது. பொதுக்கட்டமைப்பு செயற்படுத்தப்படும் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை.

ஆனால் இது மக்களின் அவசிய அவசர அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட விடயம்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நிக்கோபார் தீவுகளுக்கருகே நேற்றிரவு பாரிய பூமியதிர்ச்சி!

### தென்னிலங்கையும் அதிர்ந்தது

யாழ்ப்பாணம் —

இந்தியாவின் நிகோபார் தீவுகளுக்கு அருகே - கடலுக்கு அடியில் நேற்றிரவு இடம்பெற்ற பெரும் பூமியதிர்ச்சியின் தாக்கம் தமிழகம் மற்றும் தென்னிலங்கைப் பகுதிகளிலும் உணரப்பட்டது.

நேற்றிரவு 9.45 மணியளவில் இடம்பெற்ற இந்த பூமியதிர்ச்சி 7.2 றிச்டர் அளவில் பதிவானதாகவும் - இதனால் சுனாமி ஏற்பட வாய்ப்பில்லை என்றும் பசுபிக் சுனாமி எச்சரிக்கை நிலையம் அறிவித்தது.

கொழும்பு, இரத்தினபுரி, கண்டி ஆகிய இடங்களில் லேசாக உணரப்பட்ட இந்த பூமியதிர்ச்சியால் இலங்கையில் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை.

இதேவேளை - தமிழகத்தில் சென்னையில் இந்த பூமியதிர்ச்சியால் வீடுகள் குலுங்கியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பூமியதிர்ச்சியால் சேதங்கள் ஏற்பட்டதாக எந்தத் தகவலும் வெளி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# படையினரை உஷார்நிலையில் இருக்குமாறு வவுனியாவில் இராணுவத் தளபதி உத்தரவு

### படைத்தளங்களின் பாதுகாப்பு நிலைமையையும் மதிப்பீடு



வவுனியா —

இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுடன் நேற்றுமுன்தினம் வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கு விஜயம் செய்து பாதுகாப்பு நிலைமைகளை நேரில் பார்வையிட்டதுடன் -

படையினரை எந்தநேரமும் உஷார்நிலையில் இருக்கும் படியும் உத்தரவிட்டிருப்பதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப்புலிகளின் காலக்கெடு முடிவடைந்தும் - பாதுகாப்பான பயண ஒழுங்கு தொடர்பாகவோ, போராளிகளின் (12 ஆம் பக்கம் பார்க்க)



## ரஷ்யாவிடம் இரு ஹெலிகளை விமானப்படை வாங்கவுள்ளது!

## புலிகளின் வான் தாக்குதலை முறியடிக்க இந்தியாவில் விமானப்படைக்கு பயிற்சி!

## ரஷ்யாவிடம் இரு ஹெலிகளை விமானப்படை வாங்கவுள்ளது!

கொழும்பு —

இலங்கை விமானப் படைக்கென சீனாவிலிருந்தும், ரஷ்யாவிலிருந்தும் விமானங்கள் மற்றும் ஹெலி கொப்டர்களை அரசாங்கம் கொள்வனவு செய்யவுள்ளது.

ரஷ்யாவிடமிருந்து எம்.ஐ-26 ரக ஹெலிகொப்டர்களே கொள்வனவு செய்யப்படவுள்ளது. 20 தொன் எடையுள்ள இந்தக் ஹெலி கொப்டர்கள் பலாலி விமானத்தளத்தில் பயன்படுத்தப்பட உள்ளன.

விமானப்படையிடம் தற்போது உள்ள ஹெலிகளின் செயற்திறனை விட கூடுதல் திறன் பெற்றதாக இது இருக்கும் என கூறப்படுகிறது.

பலாலி விமானத் தளத்துக்கான விநியோகத்தைச் சீரமைக்கும் நோக்கத்திலேயே இந்தக் கொள்வனவு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளதாகக் கூறப்பட்டாலும், தற்போதைய போர்ச் சூழலில் இது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் வான் தாக்குதலை முறியடிக்க இந்தியாவில் விமானப்படைக்கு பயிற்சி!

கொழும்பு —

இலங்கை விமானப்படை - புலிகளின் விமான நடவடிக்கைகளை முறியடிப்பதற்காக இந்தியாவின் வான் பாதுகாப்பு பயிற்சி உதவிகளை பெற்றுக்கொண்டிருப்பதாகவும் - இந்தத் திட்டத்தின் கீழ் 20 விமானப் படையினர் இந்தியாவில் பயிற்சிகளைப் பெற்று வருவதாகவும் கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

விடுதலைப் புலிகள் ஆகக்குறைந்தது. அமெரிக்கத் தயாரிப்பான ஒரு ஹேர்க்குலிங் சி - 130 ரக விமானமொன்றையும் நிரந்தர விமானங்கள் இரண்டையும் வைத்திருப்பதாகக் கருதப்படுகிறது.

செக் நாட்டு தயாரிப்பான ZLIN Z-143 விமானம் என்று ஒரு விமானம் அடையாளம் காணப்பட்டிருக்கிறது. விடுதலைப் புலிகள் தமது விமானங்களில் இரவு நேரங்களில் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையிலேயே, ஐந்து பேர் கொண்ட விமானப்படை அதிகாரிகள் குழு கடந்த மாதம் இந்தியாவுக்குச் சென்று அங்கு பயன்படுத்தப்படும் வான் நடவடிக்கைகளை முறியடிப்புக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று முக்கிய சந்திப்பு

கொழும்பு —

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அசோக ஜெயவர்த்தனவுடன் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் இன்று பேச்சு நடத்தவுள்ளார்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பயணம் மேற்கொள்ளும் போராளிகளின் பாதுகாப்புத் தொடர்பாக இந்தச் சந்திப்பில் விவாதிக்கப்பட்டவுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்பில் இந்தப் பிரச்சினைக்கு சிறிதளவ் விட்டுக்கொடுப்புடன் இறுதி முடிவு ஏற்படக்கூடுமென்று போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

## கட்சித் தலைமைப் பதவியை விட்டுக்கொடுக்க மாட்டேன்!

### அனுராதபுர கூட்டத்தில் சந்திரிகா ஆவேசம்



கொழும்பு —

கட்சித்தலைமையை எவருக்கும் விட்டுக்கொடுக்கப்போவதில்லை என்றும், தானே தொடர்ந்தும் தலைவராகப் பதவி வகிக்கப்போவதாகவும் தெரிவித்துள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க -

ஜனாதிபதி வேட்பாளரையும் தானே தெரிவு செய்வேன் என்றும், மிகவும் நேர்மையான மனிதருக்கே அந்த வாய்ப்பு வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அனுராதபுரத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இவ்வர்று குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும் போது - எமது கட்சிக்கு நான் பெரும் தீங்கிழைத்துவிட்டேன். ஜே.வி.பியுடன் கூட்டணி வைத்ததுதான் அது. நாடாளு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கந்தவில் தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை!

பொலனறுவ —

பொலநறுவ - வெலிக்கந்தவில் நேற்றுமுன்தினம் இரவு இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

குடாபொக்குண என்ற இடத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கணபதிப்பிள்ளை விஜயரட்ணம் (வயது 18) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். இவர் கருணா குழுவுடன் நெருங் கிய தொடர்புள்ளவர் என்றும் செய்திக்ள் தெரிவித்தன.




ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1

EXPOAIR

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

Your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...



## சிறு விளம்பரம்

**ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்**

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள்கொண்டு கை ரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில் வியாபார இலட்சுமிகர விடயங்கள், விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு: ஹோட்டல் பிள்ளை யார் இன், அறை இல.09 - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P - 0779122836 நேரம்: காலை9.00 - 8.30 வரை.
(1198)

## வீடு விற்பனைக்கு

விலாசம்: 16/1 மடம் வீதி, யாழ்ப்பாணம். பரப்பு: ஒரு பரப்பும் 12.54 குளியும்.

குறிப்பு: வீடு சகல வசதிகளுடன் திருத்த வேலையற்றும், இரு குடும்பங்கள் வசிப்பதற்கும் ஏற்றது. தொடர்பு: வி.குலம் 0777 248366, 0777 423614.
(1994)

## தவறிவிட்டது

கைதடிச் சந்திக்கும் கோப்பாய்ச் சந்திக்கும் இடையில் பேரேட்டுப் புத்தகம் (LEDGER) ஒன்று தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள றீடோ (REERDO) அலுவலகத்தில் ஒப்படைக்கவும். அல்லது தொலை பேசி ஊடாக 077-6728444 அல்லது 021-2285999 தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(1998)


# கோப்பாய் கோட்டப் பாடசாலைகளின் திருக்குறள் மனனப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் நிறுவுனர் அமரர் மழவராயர் கந்தையா நினைவாக கோப்பாய் கல்விக்கோட்டப் பாடசாலைகளில் தரம் 10,11 வகுப்புக்களில் கல்விகற்கும் மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட திருக்குறள் மனனப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

முதலாமிடம்- பா.முகூர்த்தனா(அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்), இரண்டாமிடம் - ச.சபிலா (வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்), மூன்றாமிடம் - கு.தேனுசா (ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்),

ஆறுதற் பரிசு பெறுவோர்

ஈ.சுபேதா(வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்), த.ராஜினி(வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்), இ.ஜெசிந்தா(வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்), கு.ராஜ்குமார்(அச்சுவேலி மத்தியகல்லூரி),ப.பகிர்தா (அத்தியார் இந்துக்கல்லூரி,நீர்வேலி), இ.சோபிகா(வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்), க.தயாளினி(ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி, புத்தூர்), த.சங்கீதா (அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்).

போட்டி நிகழ்வுகள் யாவும் கோப்பாய் கல்விக்கோட்ட தமிழ் பாடத்திற்கான முதன்மை ஆசிரியர் செ.விசுவலிங்கம் தலைமையில் இடம்பெற்றன. வெற்றியாளர்களுக்கான பரிசுகள் எதிர்வரும் செப்ரெம்பர் 10ஆம் திகதி இடம்பெறும் நிறுவுநர் நாள் விழாவின்போது வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாலர் பாடசாலை விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம்

யாழ். மாநகரசபை பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு மாநகர பாலர் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் மாநகர சபைச் செயலாளர் திருமதி ம.வசந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசாவும், திருமதி குணராசாவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்தப் போட்டி கடந்த 15 ஆம் திகதி நடத்துவதற்கு ஏற்பாடாகியிருந்த போதிலும், தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இன்று நெல்லியடிக்கு விஜயம்!

நெல்லியடி

சிரேஸ்டபொலிஸ் அத்தியட்சகர் தல்பதாது இன்று நெல்லியடி பொலிஸ் நிலையத்துக்குச் சென்று அங்குள்ள நிலைமைகள் குறித்து ஆராயவுள்ளார்.

நெல்லியடி பொலிஸ் நிலையத்திலுள்ள பொலிஸாரின் பணிகள் தொடர்பாகவும், மக்களால் செய்யப்பட்ட முறைப்பாடுகள் உரிய முறையில் விசாரிக்கப்பட்டு, நடத்தப்பட்டு, அவர்களுக்கு தீர்ப்பளிக்கப்படுகின்றதா- என்பது குறித்தும் இவர் ஆராயவுள்ளார். அத்துடன் அங்குள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து அதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் நெல்லியடிப் பொலிசாருக்கு ஆலோசனை வழங்கவுள்ளார். (12)

## போட்டிப் பரீட்சை பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்

வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சில் எழுதுநர், பண்டகசாலைக் காப்பாளர், கணக்குப் பதியுநர், தட்டெழுத்தாளர் ஆகிய சேவையில் உள்ளவர்களை தரம் II இற்கு பதவியுயர்த்துவதற்காக இந்த மாதம் 30 ஆம் திகதி நடைபெறவிருந்த போட்டிப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்தப் போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் ஆறாம் திகதி நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆடிவேல் விழா

யாழ்ப்பாணம்

நல்லூர் பாலகதிர்காம தேவஸ்தான ஆடிவேல் விழாவின் ஊர்வலம் இன்று காலை 9 மணிக்கு தொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்திலிருந்து புறப்பட்டு திருநெல்வேலி வழியாக அரசடி சிவகாமசுந்தரி அம்மன் ஆலயத்தை நண்பகல் 12 மணிக்கு சென்றடையும்.

மாலை 4 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு கல்வியங்காடு ஊடாக மாலை 6 மணிக்கு ஆலயத்தை வந்தடையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.


நிறைஞ்சனாஸ் சங்கானை
ரஜினி, பிரபு, ஜோதிகா, நயந்தாரா மற்றும் பலர் நடித்த
சந்திரமுகி
பஸ் போக்குவரத்துபாதை
இல 782 – காரைநகர் / 787 மாதகல்
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாகலிங்கம் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
மகத்தான இரண்டாவது வெற்றி வாரம்
அக்சன் கிங் அர்ஜுன், சிநேகா நடித்த

சின்னா
காட்சிகள் : 10.30. 2.30. 6.30. 9.30 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
மாதவன், சதா மற்றும் பலர் நடித்த

பிரியசகி
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

ராஜா யாழ்ப்பாணம்
இன்று முதல் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு!
காதல் புகழ்
பரத், ரேணுகாமேனன்
பெப்ரவரி 14
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
ஷாம், லைலா நடித்த
உள்ளம் கேட்குமே
29 முதல் – இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
ஜெயம் ரவி நடித்த தாஸ்
காட்சிகள்:- 11.00,3.00, 6.00 (பழைய நேரம்)

20 வருடகால ஈடிணையற்ற பயிற்சி நிலையம்
**கலாலயா பயிற்சியகம்**
**மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.**

கிழமைநாள் பிரிவுக்கான அனுமதிகள் நிறைவடைந்துள்ள நிலையில், கிழமைநாள் புதிய பிரிவு - II எதிர்வரும் 01.08.2005 (திங்கள்) முதல் ஆரம்பமாகவுள்ளன என்பதை அறியத்தருகின்றோம்.

மகளிருக்கான துரித மூன்று மாதகாலப் பயிற்சிகள்
- ★ கேக் ஐஸிங் – (22 வகையான கேக் அமைப்புக்களில் ஐஸிங் செய்தல். FONDANT ICING, மாச்சீனி மலர்கள் செய்தல்)
- ★ கூந்தல் அலங்காரம்
- ★ உணவு தயாரித்தல் (COOKERY)
- ★ கைவேலை
- ★ FABRIC PAINTING
- ★ அடிப்படை முக அழகுக்கலை (FACIAL) வகுப்புகள்

பயிற்சியின்முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
6 மாதகால தையல் பயிற்சி, பூவேலை பயிற்சியும் ஆரம்பமாகின்றன.
மேலதிக விபரங்களை காலை 9.00 மணி முதல் பி.ப.2.30 மணிவரையில் நேரில் அறிந்துகொள்ளலாம்.


நமது ஈழநாடு
தமிழ் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

**நடாத்தும் 2005 ஆம் ஆண்டு தரம் ஐந்திற்கான புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கென இலங்கையிலுள்ள முன்னணி ஆசிரியர்கள் இணைந்து வழங்கும்**

## இலவச முன்னோடிக் கருத்தரங்கு

**யாழ்.மாவட்டத்துக்கான அனுசரணை வழங்குவோர்**


கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்


செலிங்கோ லைஃப்
சிறியதோ பெரியதோ எதையுமே காப்பது செலிங்கோ
சுன்னாகக் கிளை

DSI
சுப்ப சூஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பு நிலையம்

BOC
ரண் கெகுழு
சிறுவர் சேமிப்புக் கணக்கை மண்டபத்தில் ஆரம்பிக்கலாம்


**யாழ். மாவட்டத்தில்**

காலம் : 30.07.2005 (சனிக்கிழமை)
நேரம் :காலை 9.00 மணி தொடக்கம் 3.00 மணிவரை
இடம் : யாழ்.வேம்படி மகளிர் உயர் தர பாடசாலை.

**கிளிநொச்சி மாவட்டத்துக்கான அனுசரணை**


மீண்டும் புதுப்பொலிவுடன்... உங்களின் இக்காலத் தெரிவுக்கு...

குமரகுரு
புடவை அழகுப்பொருள் வாணிபம்
யாழ்.சாலை, கிளிநொச்சி.
Tel : 021 - 228 5971



**கிளி. மாவட்டத்தில்**

காலம் : 31.07.2005 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : காலை 9.00 மணிதொடக்கம் 3.00 மணிவரை
இடம் : கிளி.மத்திய கல்லூரி, பரந்தன் மகா வித்தியாலயம்.

போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது
இங்கே வெட்டவும்

## விண்ணப்பப் படிவம்

பெயர் :- ..........................................

தற்போதைய முகவரி:- ..........................................

பெற்றோர்/பாதுகாவலர் பெயர் :- ..........................................

மாவட்டம் :- ..........................................

| அலுவலக பாவனைக்கு | |
|---|---|
| இலக்கம் | |
| மாவட்டம் | |

..........................................
பெற்றோர்/பாதுகாவலர்/ஆசிரியர்கையொப்பம்

..........................................
மாணவர் கையொப்பம்

# அரசியலுக்குள் இராணுவத்தின் ஊடுருவல்; ஹெந்தவிதாரண மாற்றத்துக்கு இதுவே காரணம்

## ராஜித சேனாரட்ண தெரிவிப்பு



கொழும்பு

இராணுவத்தினுள் அரசியல் ஊடுருவல்கள் இருந்து வருவதாக ஜனாதிபதி சந்திரிகா கூறிவந்தார். இதன் காரணமாகவே - இராணுவ புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் கபில ஹெந்த விதாரண பதவிமாற்றம் செய்யப்பட்டிருக்கலாம் என - ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண தெரிவித்தார்.

இராணுவ புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் கபில ஹெந்த விதாரணவின் திடீர் பதவி மாற்றம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

சில இராணுவத்தினர் யுத்தத்தை ஊக்குவிக்கும் வகையிலான சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர்.

மேஜர் ஜெனரல் ஹெந்த விதாரண சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதற்குப் பதிலாக யுத்தத்தை ஊக்குவித்து வந்தார். அத்துடன் வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளுக் கெதிராக செயற்பட்டுவந்தாரென குற்றஞ்சாட்டப்பட்டு வந்தது.

பாதுகாப்பு மட்டத்திலும் ஜனாதிபதி சந்திரிகா இந்தக் குற்றச்சாட்டைத் தெரிவித்து வந்தார். அரசியலில் புலனாய்வுப் பிரிவினரின் செயற்பாடு இருந்தது.

நாட்டு மக்களுக்கு யுத்தம் அவசியமாக இருப்பின் இப்படியான பிரச்சினைகள். இருந்தாலும் அதனால் பிரச்சினை இல்லை. ஆனால் ஆட்சிக்கு வரும் அரசாங்கம் சமாதானத்தை முன்னெடுத்துச்செல்லவேண்டும் என்ற காரணத்திற்காகவே தமது வாக்குகளை அளித்து, அரசாங்கத்தை மக்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

ஆகவே, சமாதானம் மிக அவசியமாகிறது. அரசாங்கம் சமாதானத்தைப் பேணுவது மிகவும் அவசியம். சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வது அரசாங்கத்தின் கடப்பாடாகும்.

இதன் அவசியத்தை உணர்ந்தே ஜனாதிபதி சந்திரிகா மேஜர் ஜெனரல் ஹெந்த விதாரணவை பதவியில் இருந்து அகற்றியிருக்கலாம் என நான் நினைக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கிழக்கில் படையினரின் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு

கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பை பலப்படுத்த படையினர் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் தற்போது தோன்றியுள்ள நிலைமையைடுத்து படை அதிகாரிகள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

பொலநறுவை - மட்டக்களப்பு வீதியில் படையினர் செல்லும் வாகனங்கள் மற்றும், புலனாய்வுப்பிரிவு உறுப்பினர் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களைத் தடுக்கும் வகையிலேயே இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வெலிக்கந்த, மன்னம்பிட்டி, செவனப்பிட்டி, கல்லேல போன்ற பிரதேசங்களில் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற புலனாய்வுத் தகவல்களுக்கமைய, இந்தப் பாதுகாப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி வாழைச்சேனை மற்றும் வெலிக்கந்த பிரதேசங்களில், அனைத்து வாகனங்களும் சோதனையிடப்படும். அத்துடன் சந்தேகத்திற்குரிய வகையில் நடமாடுபவர்கள் எந்த வீதித்தடையிலும் சோதனையிடப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தே)

### சவுதி அரேபியாவிலிருந்து

# இலங்கைப் பணிப்பெண்கள் 28 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு

சவுதி அரேபியாவுக்கு வேலை வாய்ப்புத் தேடிச் சென்ற இலங்கைப் பணிப்பெண்கள் 28 பேர் நேற்று முன்தினம் நள்ளிரவு நாடு திரும்பினர்.

இலங்கையில் இருந்து வேலை வாய்ப்புத் தேடி சவுதிக்குச் சென்ற இவர்களுக்கு குறைந்தளவான சம்பளமே வழங்கப்படுகிறது. அத்துடன், பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கும் இவர்கள் உள்ளாகி வருகின்றனர்.

இதனால் விரக்தியடைந்த 28 பெண்கள் தமது நாட்டிற்கு திரும்பிச்செல்லப் போவதாக சவுதியிலுள்ள இலங்கை தூதரகத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனை ஏற்றுக்கொண்ட இலங்கை தூதரகம் அவர்களை நேற்றுமுன்தினம் நள்ளிரவு நாட்டுக்குத் திருப்பி அனுப்பியது. (01)

# பொலிஸாரால் கைது

கொழும்பு

பரிசுபெற்ற இலக்கத்தை சட்டவிரோதமாக அச்சிட்டு அதிர்ஷ்டலாபச் சீட்டினை பயன்படுத்தி பணத்தைப் பெற முயன்ற நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தலா 500 ரூபா பரிசு பெறுமதியான 11 அதிர்ஷ்டலாபச் சீட்டுக்களை இவர் வைத்திருந்ததாகவும் -

ரூபவாஹினியில் வெளியிடப் பட்ட வெற்றி இலக்கங்களை சட்ட விரோதமாக இவர் அச்சிட்டிருந்ததாகவும் தெரியவருகிறது.

இதையடுத்து அதிர்ஷ்ட லாபச் சீட்டை அச்சிட்ட இயந்திரத்தையும் பொலிஸார் கைப்பற்றினர்.

### இந்தியப் பிரதித் தூதுவரின்

# கடத்தப்பட்ட வாகனத்தை கண்டுபிடிக்க ஹெலிகொப்டர்களும் தேடுதலில்!



கொழும்பு

அம்பேபுஸ்ஸவில் வைத்து ஆயுததாரிகளால் கடத்தப்பட்ட இந்திய பிரதித் தூதுவரின் வாகனத்தைக் கண்டுபிடிக்க விமானப்படை ஹெலிகொப்டர்களும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து கண்டிக்குச் சென்றுகொண்டிருந்தபோது இந்தியப் பிரதித் தூதுவர் ராஜன் பிள்ளையின் சில்வர் பிராடோ லான்ட் குறூசர் வாகனம் இரண்டு ஆயுததாரிகளால் கடத்தப்பட்டது.

அம்பேபுஸ்ஸவில் உள்ள ஹொட்டலில் தேனீர் அருந்துவதற்காக நிறுதப்பட்டிருந்தபோதே இந்தக் கடத்தல் இடம் பெற்றது.

இதையடுத்து பெரும் எடுப்பிலான தேடுதல் வேட்டையை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். அனைத்துப் பொலிஸ் நிலையங்களும் உசார் படுத்தப்பட்டுள்ளதுடன் - இந்த வாகனத்தைக் கண்டுபிடிக்க விமானப்படை ஹெலிகொப்டர்கள் இரண்டும் வான்வழித் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இந்த வாகனத்தை நீண்டதூரம் கடத்திச் சென்றிருக்க முடியாதென்றும் இரத்தினபுரி அல்லது கம்பகா மாட்டத்திலுள்ள கராஜ் ஒன்றிலோ, தோட்டம் ஒன்றிலோ தான் மறைத்து வைத்திருக்க முடியும் என தாம் கருதுவதாக பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

# தொடரும் நிழல் யுத்தத்தின் போக்கே எதிர்கால யுத்தத்தைத் தீர்மானிக்கும்

## விமானப்படை தளபதி ஹரி குணதிலக

கொழும்பு

இராணுவத்துடனான யுத்தம் ஒன்றை தமிழீழ விடுதலைப்புலிகள் ஆரம்பிப்பதற்கான சாத்தியங்கள் இருப்பதாக - இலங்கையின் முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரி குணத்திலக தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலவரங்கள் குறித்து கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட ஹரி குணதிலக -

அரசாங்கப் படைகளுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தற்போது நடைபெறும் நிழல் யுத்தத்தின் போக்கே எதிர்கால யுத்தத்தின் முடிவைத் தீர்மானிக்கும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்த கருணா வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்தே இந்த நிழல் யுத்தம் தீவிரமடைந்தது.

கருணா மற்றும் கருணாவுடன் வெளியேற்றப்பட்டவர்களை வைத்தே இது தொடர்கிறது.

கருணா குழுவின் செயற்பாடுகள் விடுதலைப்புலிகளால் முற்றாக முடக்கப்படுமானால் அவர்கள் எதிர்கால யுத்தத்தில் இலகுவில் வெற்றிபெற முடியும் என்றும் ஹரி குணதிலக தெரிவித்தார்.

# கிழக்கில் பயங்கரவாத செயற்பாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவும்!

## இப்படிக் கோருகிறார் அத்துரலிய ரத்தின தேரர்

கொழும்பு

கிழக்கு மாகாணத்தில் பயங்கரவாத செயற்பாடுகள் உக்கிரமடைந்துள்ளதால் அந்தப் பிரதேசங்களிலிருந்து மக்கள் அச்சம் காரணமாக இடம்பெயர்ந்து செல்வது மீண்டும் அதிகரித்துள்ளது. எனவே, அவர்களைப் பாதுகாக்க உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மற்றும் முப்படைத் தளபதிகளுக்கும் கோரிக்கை விடுக்கவுள்ளதாக ஜாதிகஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தின தேரர் தெரிவித்தார்.

கிழக்கில் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்கள் மிகவும் பயங்கரமான நிலைமைக்கு உட்பட்டுள்ளன. அண்மையில் திருகோணமலைக்கு பயணத்தை மேற்கொண்டபோது சேருநுவர, கந்தளாய், வெலிக்கந்த, சிங்கபுர பகுதிகளிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்த வண்ணமிருந்தனர்.



திருமலை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள யுத்த நிலைமை தொடர்பாக நாட்டிற்கு உடனடியாக அறிவித்து, மக்களைப் பாதுகாக்க விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் கடிதமூலமும் மற்றும் நேரடியாகவும் கேட்கப்படும்.

திருமலை உட்பட பிறமாவட்டங்களில் நிகழும் நிலைமைகள் தொடர்பாக நாட்டு மக்களுக்கு தெரிவிக்காது அரசு மூடி மறைத்து வருகின்றது. எனவே, ஊடகவியலாளர்களை அப்பகுதிக்கு அழைத்துச்சென்று உண்மை நிலையை கண்டறியும் செயற்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் மேலும்தெரிவித்தார். (தே)

### சம்பளமேதுமின்றி இலங்கைப் பெண்ணிடம்

# வேலை வாங்கிய அமெரிக்கருக்கு 6 மாத காலச் சிறைத் தண்டனை

வொஷிங்டன்

இலங்கைப் பெண் ஒருவரை 2 வருடங்களாக - சம்பளம் ஏதும் வழங்காமல் அடிமையாக வைத்திருந்து வேலை வாங்கிய குற்றத்திற்காக அமெரிக்கர் ஒருவருக்கு 6 மாத சிறைத்தண்டனையும், அவரது மனைவிக்கு 2 இலட்சத்து 25 ஆயிரம் டொலர் அபராதமும் விதித்து அமெரிக்க மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

சந்திரா புலத்வத்த என்ற இலங்கைப் பெண்ணை 2002 ஏப்ரல் மாதம் முதல் 2004 பெப்ரவரி மாதம்வரை வீட்டினுள் அடைத்து வைத்திருந்து நாளொன்றுக்கு பதினாறு மணித்தியாலங்கள் சம்பளமேதும் வழங்காமல் வேலை வாங்கிய குற்றத்திற்காகவே இந்தத் தண்டனை வழங்கப்பட்டது.

அமெரிக்காவில் நியூயோர்க் மாநிலத்திலுள்ள கணனி நிறுவனத் தலைவரான மகேர் ஜிசி என்ற 46 வயதுடைய நபருக்கே 6 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இவரது மனைவியான 36 வயதுடைய மாறெல் ஜிசிக்கு 2 லட்சத்து 25 ஆயிரம் டொலர் அபராதமாகச் செலுத்தும்படி நீதிமன்றம் கடந்த வெள்ளியன்று தீர்ப்பளித்தது.

# இராணுவக் கட்டமைப்பில் விரைவில் மாற்றங்கள்!

கொழும்பு

இராணுவக்கட்டமைப்பில் பெரும் மாற்றங்கள் இடம்பெறலாம் என கொழும்புத் தகவல் தெரிவித்தன.

மேஜர்ஜெனரல் சீவலி வணிகசேகர ஓய்வுபெற்று செல்வதையடுத்தே இந்த மாற்றங்கள் இடம்பெறவுள்ளதாகவும் - இதற்கு இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட பரிந்துரை செய்திருப்பதாகவும் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை கேணல் தரத்தைச் சேர்ந்த 12 அதிகாரிகள் பிரிகேடியர் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர் எனவும் தெரியவருகிறது. (01)

# சர்வதேச ஜனநாயக சங்கத்தின் அறிக்கைக்கு பொ.ஐ.மு. கண்டனம்

கொழும்பு

வொஷிங்ரனில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச ஜனநாயக சங்கக் கூட்டத்தில் - ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து பொதுஜன ஐக்கிய முன்னணி அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாகப் பத்திரிகைகளில் வெளிவந்த விடயங்கள் குறித்து பொதுஜன ஐக்கிய முன்ன்ணி வெளியிட்ட விசேட ஊடக அறிக்கையிலேயே இந்த அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியினரும், ஐக்கிய தேசியக் கட்சியினரும்தெரிவித்த தவறான தகவலின் மூலம் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலை 2005இல் நடத்த வேண்டும் எனத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றப்பட்டதாகவும்,

இதனால் இந்த வருடம் நடைபெறவிருந்த ஜனாதிபதித் தேர்தலை அரசாங்கம் பிற்போட்டமை குறித்து சர்வதேச ஜனநாயக தொழிற்சங்கம் கவலை தெரிவித்தது என்றும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் வெற்றியை நோக்கி அவுஸ்ரேலியா!



லண்டன் —

லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்றுவரும் ஆஷஸ் டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியில், அவுஸ்ரேலிய அணி வெற்றிபெறும் நிலையில் உள்ளது.

அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸில் 190 ஓட்டங்களுடனும், இரண்டாவது இனிங்ஸில் 384 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்ததால் - இந்தப் போட்டியில் வெற்றிபெற இங்கிலாந்து அணி 420 ஓட்டங்களைக் குவிக்க வேண்டியிருந்தது.

ஆனால் முதல் இனிங்ஸில் 155 ஓட்டங்களைப் பெற்ற இங்கிலாந்து அணி மூன்றாவது நாள் ஆட்டநேரமுடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 156 ஓட்டங்களை எடுத்து தள்ளாடிய நிலையில் இருந்தது.

இரண்டாவது இனிங்ஸை நேற்றுமுன்தினம் மதியத்துக்குப் பின்னர் ஆரம்பித்த இங்கிலாந்து அணி தொடக்கத்தில் உறுதியான நிலையில்தான் இருந்தது.

அணியின் ஸ்கோர் 80ஐ எட்டும்வரை தொடக்க வீரர்களை





வீழ்த்தமுடியாமல் அவுஸ்ரேலிய வீரர்கள் சிரமப்பட்டனர். ஆனால் 37 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஸ்ரரஸ் - லீயின் பந்தை அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தபின்னர், இங்கிலாந்து அணிக்கு துரதிஷ்டம் தொற்றிக் கொண்டது.

ஸ்கோர் 96ஆக இருந்தபோது - ட்ரெஸ்கொதிக் 44 ஓட்டங்



களுடன் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் பெல், வோன், பிளின்ரொப் போன்ற முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் அடுத்



தடுத்து ஆட்டமிழந்தனர்.

ஸ்கோர் 104ஆக இருந்தபோது, பெல் 8 ஓட்டங்களுடனும், ஸ்கோர் 112ஆக இருந்தபோது - வோன் 4 ஓட்டங்களுடனும், ஸ்கோர் 119ஆக இருந்தபோது பிளின்ரொப் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

வோன் 3 விக்கெட்டுக்களையும், லீ 2 விக்கெட்டுக்களையும் சாய்த்த பின்னர் - பீற்றர்சன் - ஜோன்ஸ் ஜோடி சற்று நிதானமாக ஆடத் தொடங்கியது.

மூன்றாம் நாளான நேற்றுமுன்தினம் மாலை ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது - இங்கிலாந்து அணி 5 விக்கெட் இழப்புக்கு 156 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பீற்றர்சன் 42 ஓட்டங்களுடனும், ஜோன்ஸ் 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# கிளென் மக்ராவின் அடுத்த கனவு வோல்ஷ் சாதனை முறியடிப்பாம்!



லண்டன் —

டெஸ்ட் போட்டிகளில் 500 விக்கெட்டுக்களைச் சாய்த்த பெருமை பெற்றிருக்கும் மக்ரா - ஆஷஸ் தொடரிலேயே கொட்னி வோல்ஷின் சாதனையை (519 விக்கெட்டுக்களை) கடந்து விடுவேன் எனத் தெரிவித்தார்.

அவர் தனது சாதனை குறித்து செய்தியாளர்களிடம் கூறுகையில் -

பெரிதாக சாதித்துவிட்டதாக நான் என்றுமே நினைப்பதில்லை. ஆனால், 500 விக்கெட்டுக்களைக் கடந்தது கிரிக்கெட்டில் ஒரு முத்திரை பதித்த உணர்வை எனக்குத் தருகிறது. பெரிய இலக்குகளை நான் நிர்ணயித்துக் கொள்வதில்லை. அடுத்து நான் கடக்கவேண்டியது கொட்னி வோல்ஷ் சாதனையை (519 டுக்கள்) என்று நினைக்கிறேன்.

இப்போது 504 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருக்கிறேன். இன்னும் 15 விக்கெட்டுக்களை வீழ்த்த இந்த ஆஷஸ் தொடர் போதும் என்று நினைக்கிறேன். 500 விக்கெட் வீழ்த்துவது பற்றி பெரிய கனவெல்லாம் இருந்ததில்லை.


ஆனால், முதல்நாள் ஆட்ட நேர உணவு இடைவேளையின்போது, திடீரென ஒரு இனம் புரியாத பரவசம். 500 விக்கெட் வீழ்த்தப்போகிறோம் என்ற நினைப்பில் வயிற்றுக்குள் வண்ணாத்துப் பூச்சி பறப்பது போன்ற உணர்வு.

டெஸ்ட் கிரிக்கெட்டில் 500 விக்கெட் வீழ்த்தியதற்குப் பின்னணியில் பெரிய ரகசியம் எதுவும் இல்லை. நூறு பந்துகள் வீசினால், அதில் 99 பந்துகளை நேர்த்தியாக வீசினால் போதும்.

சரியான அளவில், ஓவ்-விக்கெட்டுக்கு மேலே வீசினால் போதும். தவிர, துடுப்பாட்ட வீரரைச் சலிப்படையச் செய்வதும் பலனளிக்கும். ஒரு கட்டத்தில், வெறுத்துப் போய் அடிக்க முயற்சி செய்து ஆட்டமிழந்து விடுவார்கள் என்று மக்ரா தெரிவித்தார்.

விளையாட்டு

# இந்திய கிரிக்கெட் அணி கொழும்புக்கு வந்தது!



சென்னை —

இலங்கையில் நடைபெறவுள்ள முத்தரப்பு கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்வதற்காக இந்திய கிரிக்கெட் அணி நேற்றுமுன்தினம் இலங்கை வந்தது.

இலங்கையில் முத்தரப்பு கிரிக்கெட் போட்டி இம்மாதம் 30ஆம் திகதி முதல் அடுத்தமாதம் 9ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதில் கலந்துகொள்ள இந்திய அணி வீரர்கள் சென்னையிலிருந்து விமானம் மூலம் நேற்றுமுன்தினம் கொழும்பு வந்து சேர்ந்தனர்.

டெல்கியிலிருந்து வந்த விமானம் சென்னைக்கு நேற்றுமுன்தினம் காலை தாமதமாக வந்ததால் ஷேவாக்கையும் சேர்த்து அழைத்துவரவேண்டிய இலங்கை விமானம் தாமதமாகவே புறப்பட்டது. அத்துடன் புதிய பயிற்சியாளர் கிரேக் சப்பலும் உடன் வந்துள்ளார்.

## சென்.தோமஸ் கிண்ண உதைபந்தாட்டம்

# யங்ஹென்றீஸ் அணியை வீழ்த்தி சம்பியனானது சென்.மேரிஸ் அணி!

மாதகல் —

சுனாமியால் உயிரிழந்த மாதகல் வாழ் பொதுமக்களின் நினைவாக தமிழீழ விளையாட்டுத் துறை வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவில் -நமது ஈழநாடு ஊடக அனுசரனையுடன் மாதகல் சென்.தோமஸ் விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்டுவந்த 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணிக்கு நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இளவாலை யங்ஹென்றீஸ் மோதியது. ஆட்டம் ஆரம்பித்த 9ஆவது நிமிடத்திலும், 13 ஆவது நிமிடத்திலும் இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழக வீரர்கள் சுரேந்தரும், ஸ்ரீபனும் தலா ஒரு கோலைப் போட்டனர். தொடர்ந்து இருபத்தைந்தாவது நிமிடத்தில் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக வீரர் பிரபு கோல் ஒன்றைப் போட்டார். இடைவேளையின் பின்னர் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக வீரர்களான பிரபா ஒரு கோலையும், வின்சிங் இரண்டு கோலையும் போட்டனர். இதற்கமைய 4:2 என்ற கோல் கணக்கில் சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றியைத் தன தாக்கிக் கொண்டது.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின. முதலாவது இடத்தைப் பெற்ற சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகத்திற்கு சென்.தோமஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த திருமதி அன்ரனிதாஸ் பரிசில் வழங்கினார். தொடர்ந்து இரண்டாமிடத்தைப் பெற்ற இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழகத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரின் செயலாளர் இராசசிங்கம் பரிசில் வழங்கினார். மூன்றாமிடத்தைப் பெற்ற றோயல் விளையாட்டுக்கழகத்திற்கு கடற்புலிகளின் வலிகாமம் அரசியற்துறைப் பொறுப்பாளர் மணாளன் பரிசில் வழங்கினார்.

இந்த உதைபந்தாட்ட போட்டியின் ஆட்ட நாயகனாக சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக வீரர் வின்சிங்கும், சிறந்த கோல் காப்பாளராக யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழக வீரர் கிரிசியனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இறுதியாட்ட மத்தியஸ்தர்களாக சந்திரன், றஞ்சன், குணசீலன் ஆகியோர் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

## கே.சி.சி.சி. கிண்ண கிரிக்கெட்

# யசிந்தனின் அபார ஆட்டத்தால் காலிறுதியில் சென்ரலைட்ஸ்!



கொக்குவில் —

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடத்தும் கே.சி.சி.சி. கிண்ணத்துக்காக யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான 30 ஓவர்களைக் கொண்ட லீக் முறையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் கடைசி லீக் ஆட்டத்தில் மானிப்பாய் பரிஷ் அணியை வெற்றி கொண்ட சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம், காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம், 30 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பாஸ்கரன் 37, ஜெயராஜ் 31, யசிந்தன் 23, திலக் 21, சிறீஸ்கஜன் 18, சிவாஸ்கர் 16 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியின் சார்பில் சாள்ஸ் 4, யசிந்தன், பிரகாஸ் ஆகியோர் தலா 2, பிரசாத், மதூசன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் யசிந்தனின் அதிரடி ஆட்டத்தினால் ஒரு பந்து மிகுதி இருக்கையில் ஒரு விக்கெட் வித்தியாசத்தில் இந்தப் போட்டியில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்கான தகுதியைப் பெற்றுக்கொண்டது.

இதில் சென்ரலைட்ஸ் அணியின் சார்பில் யசிந்தன் 59, பிரசாத் 36, மதூசன் 22 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் மானிப்பாய் பரிஷ் அணியின் சார்பில் பார்த்தீபன் 4, கிஷோக்குமார் 3, உதயன் மற்றும் சதீஸ்கரன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (58)

# உயர உயரப் பறக்கும் ரஷ்யாவின் ஜெலீனா!



லண்டன் —

ரஷ்யாவின் கோல் ஊன்றிப் பாய்தல் வீராங்கனை இசின் பயேவா மீண்டும் உலக சாதனை படைத்தார்.

லண்டனில் சனிக்கிழமை நடைபெற்ற சுப்பர் கிராண்ட் பிரீ தடகளப் போட்டியில், அவர் 5.00 மீற்றர் உயரத்தை கோல் ஊன்றித் தாண்டி தனது முன்னைய சாதனையை முறியடித்தார்.

மட்ரிட்டில் கடந்த 16ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் 4.96 மீற்றர் உயரம் தாண்டியதே இதற்குமுன் அவரது சாதனையாக இருந்தது. ஜூலை மாதத்தில் மட்டும் அவர் 4 முறை உலக சாதனை படைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

2 ஆண்டுகளுக்கு முன்பு 4.82 மீற்றர் உயரம் தாண்டி முதல் முறையாக உலக சாதனை படைத்தார். அதன்பின்னர் 17 முறை உலக சாதனைக்குச் சொந்தக்காரராக இருந்து வருகிறார் 23 வயதாகும் இசின் பயேவா.

போலந்து வீராங்கனை அன்னா ரோகோவ்ஸ்கா 4.80 மீற்றர் உயரம் தாண்டி இரண்டாமிடத்தைப் பிடித்தார். இது அவருக்கு தேசிய சாதனையாக அமைந்தது.

# தேசியமட்டப் போட்டிக்குத் தெரிவு!

வவுனியா —

வவுனியாவில் நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான மாகாணமட்ட உதைபந்தாட்டப் போட்டியின் 17 வயதுப் பிரிவில் புங்குடுதீவு மகாவித்தியாலய அணி இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளது.

இறுதியாட்டத்தில் மன்னார் சென்.சேவியர் கல்லூரி அணியை எதிர்கொண்ட புங்குடுதீவு மகாவித்தியாலய அணி 3:2 என்ற கோல் கணக்கில் தோல்வியுற்றது.

எனினும் இந்த இரண்டு அணிகளும் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளன.

# நாசாவில் பணிபுரியுமளவுக்கு ஈழத்தமிழனை உயர்த்தியவர்கள் ஆசிரிய சமூகத்தினரே!



யாழ்ப்பாணம் —

அப்பலோ விண்வெளி ஓடம் 1969 ஆம் ஆண்டு சந்திரனை அடைந்தபோது, நாசாவின் கட்டுப்பாட்டறையில் குப்பிளானைச் சேர்ந்த வைத்திலிங்கம் துரைச்சாமி என்ற விஞ்ஞானி இருந்தார். அவர் போன்ற அறிஞர்களை எமது ஆசிரிய சமூகமே உருவாக்கியது என செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தெரிவித்தார்.

அகவழி நிறுவனமும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையும் இணைந்து நடத்திய 'கல்வி ஒருவன் முகப்பார்வை' என்ற தொனிப் பொருளிலான கல்வி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தியின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆறுதிருமுருகன் தொடர்ந்து உரையாற்றுகையில் -

1969 ஜூலையில் அப்பலோ விண்வெளி ஓடம் சந்திர மண்டலத்தை அடைந்தபோது, இந்த ஈழத்துத் தமிழ்மகன் நாசாவின் கட்டுப்பாட்டு அறையில் ஒரு முக்கிய பணியில் இருந்திருக்கிறார் என்பது எமக்கெல்லாம் பெருமை தரும் விடயமே.

குப்பிளானிலே காலையிலும், மாலையிலும் தோட்டத்தில் வேலை செய்துவிட்டு, தோட்டத்திலிருந்தே பாடசாலைக்கு ஆயத்தமாகி சீப்புக்குப் பதிலாக ஊரிமட்டை கொண்டு தலைசீவி, கால்நடையாக நடந்து பாடசாலை சென்று படித்த அந்தத் தமிழ் மகன் நாசாவிலே பணிபுரியும் அளவுக்கு அவனை அன்று உயர்த்திவிட்டவர்கள் எமது அன்றைய ஆசிரியர் சமூகத்தினரே.

அன்று அவர்களிடையே ஒரு கிராமத்துப் பிள்ளையை, சாதனை புரியும் விஞ்ஞானியாக உருவாக்கக்கூடிய அர்ப்பணிப்பு இருந்தது. இன்று நாம் எத்தனை விஞ்ஞானிகளை உருவாக்கியுள்ளோம். இது சிந்திக்கப்பட வேண்டிய ஒரு விடயம்.

இன்று ஆசிரியர்களிடையே சுமத்தப்படும் ஒரு குற்றச்சாட்டு ஆசிரியத்துவம் என்பது முழுமையான அர்ப்பணிப்புடன் செய்யப்படுவதில்லை என்பதாகவே இருக்கிறது. இவ்வாறான குற்றச்சாட்டுகளை எழுதுவதற்கும் காரணங்களும் இருக்கின்றன தான். இன்று எமது ஆசிரியர்கள் பல அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது.

அத்துடன் பொருளாதார நோக்கில் வேதனத்தை உயர்த்துவதற்காக உரிய படிவங்களைத் தூக்கித்திரிய வேண்டியும் இருக்கிறது. இன்றைய ஆசிரியர்களிடையே வாசிப்புப் பழக்கம் குறைவு என்றும், ஒரு கருத்து எழுகிறது.

எமக்கு முன்னர் வாழ்ந்த ஆசிரியர்கள் சமூகத்தில் இன்றும் மதிக்கக் கூடியவர்களாக வாழ்ந்து கொண் டிருக்கின்றனர். அவர்களால் இது எப்படி முடிந்தது? இது பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். இன்று பாடசாலைகளில் தமிழ் விழா என்றால், தமிழ்மொழி கற்பிக்கும் ஒரு சில ஆசிரியர்கள் மட்டுமே பங்கெடுத்துக் கொண்டு இருப்பார்கள்.

## ஆறு திருமுருகன்

மற்றைய ஆசிரியர்கள் தமக்குச் சம்பந்தமே இல்லையென ஒதுக்கியிருப்பார்கள். அன்று நிலை அப்படியில்லை. ஒவ்வொரு விடயத்தையும் எல்லோருமே கற்றுக் கொள்ள விளைந்தனர். அவ்வாறு தாம் கற்றவற்றை மாணவர்களுக்குப் போதிக்கத் தயக்கம் காட்டாது முன்வந்தனர். அதன் விளைவாகத் தான் பலர் உலகத்தின் பல பாகங்களிலும் பெருமை பெறுகின்றனர்.

படிக்க ஆசைப்படும் ஒரு பிள்ளைக்காக எங்களால் ஆன எதையும் செய்துகொடுக்க வேண்டும் என்பதே ஆசிரியர்களது அவாவாக, செயற்பாடுகளாக, கடமைகளாக இருந்தது.

அவர்களது அந்த அர்ப்பணிப்புச் செயல்களே யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம்பரியத்தை பெருமை கொள்ளும் நிலைக்கு உயர்த்தி நிற்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (31)

## பட்டப் பகலில் திருட்டு

சங்கானை —

வீட்டில் யாரும் இல்லாத சமயம் பார்த்து பல லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை திருடிச் சென்ற சம்பவமொன்று சங்கானையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சங்கானை முருகமூர்த்தி கோவில் வீதியைச் சேர்ந்த மார்க்கண்டு சிறீதரன் என்ற ஆசிரியரின் வீட்டிலேயே யாரும் இல்லாத நேரத்தில் பட்டப்பகலில் யன்னல் கம்பியை உலக்கையால் வளைத்து உட்புகுந்த திருடர்கள் - தொலைக்காட்சிபெட்டி, விலையுயர்ந்த கமரா, கைத்தொலைபேசி மற்றும் பெறுமதி மிக்க உடுபுடவைகளைத் திருடிச் சென்றதாகத் தெரியவருகிறது. (48)

## இடமாற்றங்கள்

மட்டுவில் —

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நிர்வாக கிராம அலுவலராகக் கடமையாற்றிய வி.கே. சண்முகநாதன் கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கும், நல்லூரில் கடமையாற்றிய நிர்வாக அலுவலர் தென்மராட்சிக்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர். இருவரும் அண்மையில் தத்தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டனர். (24)

# சங்கானையில் கலை இலக்கிய பெரு விழா!

சுதுமலை —

வலிகாமம் மேற்கு சங்கானை கலாசாரப் பேரவையின், கலை இலக்கியப் பெருவிழா சங்கானை கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 12, 13 ஆம் திகதியில் நடைபெறவுள்ளது.

பாரம்பரிய கலை இலக்கியப் பெருவிழாவில் நாட்டுக்கூத்து, நாடகம், நடனம், இலக்கியப் பகிர்வு இவற்றுடன் கலைஞர் கௌரவிப்பும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கலாபூஷணம் அ.முருகவேள், கா.சந்திரராசா ஆகியோரது அரங்குகளில் இருநாள் கலை இலக்கியப் பெருவிழா நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (91)

# பாடசாலை நூலக தினமும் நடமாடும் நூலக சேவையும்

யாழ்ப்பாணம் —

மாணவர்களின் ஆங்கில மொழிமூல வாசிப்பு பழக்கத்தைத் தூண்டும் நோக்குடன் யாழ்.வைத்தீஸ்வரா கல்லூரி - யாழ்.பொதுநூலக நடமாடும் நூலக பிரிவு, பிராந்திய ஆங்கில ஆதரவு நிலையம் ஆகியவற்றுடன் இணைந்து வெளிச்ச வீடு பாடசாலை நூலக தினமும், நடமாடும் ~~நூலக சேவை~~ ஒன்றையும் நடத்தவுள்ளது.

இந்த நிகழ்வு நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.30 மணி தொடக்கம், பிற்பகல் 4.30 மணிவரை வைத்தீஸ்வராக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இதன்போது இலகு நடையில் அமைந்த ஆங்கிலக் கதைகள், பாடல்கள், சஞ்சிகைகள் போன்ற பலதரப்பட்ட நூல்களை நூல் தினத்தில் மாணவர்கள் வாசித்து பயன்பெறலாம் எனவும், பொது நூலகத்தில் சிறுவர் பிரிவில் 15 வயதுக்கு கீழ்ப்பட்ட மாணவர்கள் 75 ரூபாவைச் செலுத்தி இந்தத்தினத்தின்போது அங்கத்தவர்களாக இணைந்து கொள்ளலாம் எனவும் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

# வடமராட்சியில் 9 பாடசாலைகளுக்கு மலசலகூடம் மற்றும் குடிநீர் வசதிகள்

ஆழியவளை —

வடமராட்சி கல்வி வலயத்தில், சுனாமி அனர்த்தத்தால் சேதமடைந்து தற்போது தற்காலிகமாகக் கொட்டகைகளில் இயங்கிவரும் 9 பாடசாலைகளுக்கும் மலசலகூடம் மற்றும் குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு யுனிசெப் நிறுவனம் முன்வந்துள்ளது.

இதற்கென சுமார் 25 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் இந்தப் பாடசாலைகளில் மலசலகூடத் தொகுதிகளும், குடிநீர்க் கிணறுகளும் அமைக்கப்படவுள்ளன.

இவற்றை மிக விரைவில் அமைத்து முடிக்குமாறு யுனிசெப் நிறுவனமும், வடமராட்சி வலயக்கல்வித் திணைக்களமும் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளது. (122)

## அதிபர் நியமனம்

ஆழியவளை —

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் புதிய அதிபராக, அதிபர் தரம் I ஐச் சேர்ந்த அ.விஜயநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (122)

## வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் —

யாழ்.மாநகரசபை ஊழியர் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தின் 38 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் - நாளை மறுதினம் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் இ.திருக்கருணை தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக விசேட ஆணையாளர் கலாநிதி க.குணராசா கலந்துகொள்ளவுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்க மாநகரசபை விசேட ஆணையாளர் ஊழியர்களுக்கு விசேட அனுமதி வழங்கியுள்ளார்.

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### அகவை ஒன்று



பெயர் : ஜேம்ஸ் டினோசன்
முகவரி : யாழ்ப்பாணம்



பெயர் : ஜேம்ஸ் டில்சான்
முகவரி : யாழ்ப்பாணம்

### அகவை ஏழு



பெயர் : சே.அபிநயா
முகவரி : உடுப்பிட்டி

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ------------------------

முகவரி : ------------------------

பிறந்த ஆண்டு: ------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றோர் ஒப்பம்

# க.பொ.த.உயர்தர கணித, விஞ்ஞான ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்!

சுதுமலை —

க.பொ.த உயர்தரத்தில் கணித, விஞ்ஞான பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வினாத்தாள் தொடர்பான கலந்துரையாடல் வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தால் இந்த மாதம் 31 ஆம் திகதி பௌதீகவியலுக்கும், ஒகஸ்ட் 6 ஆம் திகதி இணைந்த கணிதம், உயிரியல் பாடங்களுக்கும், 7 ஆம் திகதி இரசாயனவியலுக்கும் வினாத்தாள் தொடர்பான கலந்துரையாடல் நடைபெறும்.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை உரிய திகதிகளில் காலை 8.30 மணிக்கு தவறாது கலந்து கொள்ளுமாறு தொண்டமானாறு வெளிக்கள நிலைய கற்கை நெறியாளர் திருமதி எம். ராஜாராம் கேட்டுள்ளார். (91)

# ஆசிரிய சேவை உள்ளீர்ப்பு தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் —

ஆசிரிய சேவை உள்ளீர்ப்பு, பதவி உயர்வு, மறுசீரமைப்பு சுற்றறிக்கை தொடர்பான கருத்தரங்கு, இலங்கை ஆசிரியர் சங்க யாழ்.மாவட்டக் கிளையால் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

இதன்போது பாதிக்கப்பட்டவர்கள் தமது தேவைகளை இரு பிரதிகளில் எழுதிச் சமர்ப்பிக்கலாம். இதன்மூலம் தேவையான நடவடிக்கைகள் எடுக்க உதவியாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சகல ஆசிரியர்களும் பங்குபற்றி தேவையான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# சின்னஞ்சிறு செய்திகள்

## 'ஆற்றல்' இறுவட்டு வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் —

ஆற்றல்' வாய்பாடு ஒலிப்பேழை இறுவட்டு வெளியீட்டு விழா - இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் கல்லூரி அதிபர் அ.சிறிகுமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.சிவபாதம் கலந்துகொள்ளவுள்ளார்.

## சுகாதாரப் பொதிகள் அன்பளிப்பு

ஆழியவளை —

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் வாழும் வடமராட்சி கிழக்கு, வடமராட்சி வடக்கு வாழ் மக்களுக்கு கனடா செஞ்சிலுவைச்சங்கம் சுகாதாரப் பொதிகளை வழங்கி வருகிறது.

இதுவரை குடும்பங்களுக்கான 10 ஆயிரம் சுகாதாரப் பொதிகளும், குழந்தைகளுக்கான 2 ஆயிரம் சுகாதாரப் பொதிகளும் விநியோகிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (122)

## விண்ணப்பப் படிவங்கள்

மட்டுவில் —


தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு வர்ணப் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டைக்கான விண்ணப்பப் படிவங்கள் வந்துசேர்ந்துள்ளன.

இந்தப் படிவங்கள் புதிதாக விண்ணப்பிப்பவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும் எனவும், இவை அந்தந்தக் கிராம அலுவலர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதேச செயலக அடையாள அட்டைப் பிரிவினர் தெரிவித்தனர். (24)

## இந்து மயானங்கள் புனரமைப்பு

சுதுமலை —

நவாலியிலுள்ள இரண்டு இந்து மயானங்கள் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் நவீன முறையில் புனரமைக்கப்படவுள்ளன. நவாலி கொத்துக்கட்டி, அரியம்பிட்டி ஆகிய இரு இந்து மயானங்களுமே புதிய கொட்டகைகள் அமைத்துப் புனரமைக்கப்படவுள்ளதாக பிரதேச சபை செயலாளர் மே.சாந்தசீலன் தெரிவித்தார். (91)



# வெறுங்கூடு

சிறுகதை

டானியல் ஜீவா

சற்றுமுன்புதான் திருந்தாதி மணி யடித்து ஓய்ந்தது. முன்பெல்லாம் நள்ளிரவு மூன்றோ, நான்கோ மணிக்கெல்லாம் விழித்து தொழிலுக்குப்போவது தான் தொழிலாளர்களின் வழக்கம். அந்தோனியும் இதற்கு விதிவிலக்கல்ல.

இப்போதெல்லாம் அப்படி நடப்பதில்லை. திருந்தாதி மணி ஆறுமணிக்கு கோயிலிருந்து அடித்தபின்னர்தான், தொழிலுக்குப் போகவேண்டிய கட்டாய சூழ்நிலை. இந்திய இராணுவம் சனசமூக நிலையக் கட்டடத்துக்குள் முகாமிட்ட பின்னரே, இந்தக் காலவரையறை கட்டாயநிலைக்கு வந்துவிட்டது. பொதுவாக இந்தச் சூழல் மீனவர்களுக்கு உடன்பாடில்லையென்றாலும் அவற்றை மீறி நடந்துகொள்ள எவருக்கும் துணிச்சல் வரவில்லையென்று சொல்வதிலும் பார்க்க, துப்பாக்கிச்சூடு வாங்கத் தயார் என்றால், அந்த முடிவை எடுக்கலாம் என்று சொல்வது தான் பொருத்தமாயிருக்கும்.

காலையில் இராணுவத்தின் காவலரணுக்குச் சென்று, தொழிலுக்குப் போகிற மீனவர்கள் வரிசையில் நின்று, தமது அடையாள அட்டையைக் கொடுத்து, பதிவேட்டில் பதிந்தபின் அடையாள அட்டையை அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு கடலுக்குப்போனால், வரும்போது அந்தக் காவலரணுக்குச் சென்று வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போவார்கள். இராணுவம் கட்டடத்துக்குள் இருந்தாலும், அந்த வளவுக்குள்ளேயே ஒரு மூலையை ஒட்டி மண்மூட்டைகள் அடுக்கி, ஒரு சிறிய கூடுபோல் காவலரண் போட்டிருந்தார்கள். சில மணித்தியாலத்துக்கு ஒருமுறை மாறி மாறி காவல் புரிவார்கள். இதேபோல் கடற்கரையைப் பார்த்தபடியிருக்கும் கட்டடத்தின் பின்பக்கமாக எந்நேரமும் துப்பாக்கி சகிதம் உலாவித் திரிவார்கள். முன்னரங்கில் மட்டுமல்ல, கடல் பக்கமாக இருந்தும் வந்து தாக்குதல் தொடுக்கலாம் என்ற எச்சரிக்கையோடு மிகவும் அவதானமாகக் காவலிருப்பார்கள். உள்ளுக்குள் ஒருவித பயமோ அல்லது பயமற்றோ இருக்கும் அந்த இருப்பில், காவலரணைக் கடந்து செல்கின்ற ஒவ்வொரு மனித முகத்தையும் உன்னிப்பாய்க் கவனிக்காமல் விடுவதில்லை. சிலர் தங்கள் கண்ணுக்குள் இதுவரையில் புலப்படாத முகமாய் இருந்தால், அவர்களை மறித்து அடையாள அட்டையைப் பார்ப்பதோடு, அவர்கள் பற்றிய முழுமையான விபரத்தை அறிந்து கொள்வார்கள். சந்தேகத்தின் பேரில் யாரும் கைது செய்யப் பட்டால், அவர்களை எங்கு கொண்டு செல்கிறார்கள், அவர்களுக்கு என்ன நடக்கிறது என்பது பற்றி அந்தோனிக்கோ, அந்த ஊரைச்சேர்ந்த யாருக்குமே தெரியாத விடயம்.

அந்தோனி தொழிலுக்குப் போவதற்கு தயாராகிக் கொண்டான். இன்று சனிக்கிழமை என்ற படியால் மாறனுக்கு பாடசாலை விடுமுறை. மகனையும் எழுப்பி விட்டான், தொழிலுக்குக் கூட்டிக்கொண்டு போவதற்காக. அறைக்குள் படுத்திருந்த மேரியின் இருமல் சத்தத்துடன் அந்தோனியின் மனைவி எலிசபேத்து தூக்கம் கலைந்து விழித்துவிட்டாள். படுத்த படுக்கையில் கிடந்தபடியே... “இஞ்சேருங்கோ தேத்தண்ணி போட்டுத் தரட்டாங்கோ?” என்று கேட்டபோது, எலிசபேத்தின் நினைவு அந்தோனியின் நெஞ்சில் முட்டியது. நேற்றிரவே அவனுக்கு எலிசபேத் சாப்பாடு போட்டுக்கொடுக்கும்போதே அவள் கொஞ்சும் குரலில் செல்லமாய் பலவற்றைச் சொன்னாள். அநேகமாக இருவரும் சாப்பிடும்போதுதான் பல விடயங்கள்பற்றி பரஸ்பரம், புரிந்துணர்வுடன் கதைத்துக் கொள்வது வழக்கம். எப்போதாவது எந்தக் கருத்து நிலையில் முரண்பாடு எழுந்தாலும் அவர்கள் தங்களுக்குள் அன்றைய பொழுதே பேசித் தீர்த்துக்கொள்வார்கள். நேற்றைய பொழுதில் எலிசபேத் சொன்ன வார்த்தைகள் - அவனைச் சுற்றிச் சுழன்று வந்துகொண்டிருந்தது.

“இஞ்சேரப்பா நமக்கெண்டு இருக்கிற தொழில் கடற்தொழில்தான். அதையும் இந்தப் பாழ்பட்டுப்போவார் வந்தபிறகு நேரக் கட்டுப்பாடு போட்டிட்டாங்க. இதால வலை இழுக்கப் போறதற்குள்ள விடிஞ்சு போய் மீன், றால் எல்லாம் வலைக்குள் இருந்து மீண்டும் போய்விடுதுங்க. எத்தனை நாளுக்குத்தான் இப்படி வலை இழுக்கப்போய் வெறுங்கையோட வாறது. ஒருக்கா ஆமிக்காரன்கிட்ட கதைச்சு, நேரத்தோட தொழிலுக்குப்போக வழி பண்ண மாட்டீங்களா...?”

“எலிசபேத் நான் என்ன செய்யமுடியும். அவங்க என்னதான் இருந்தாலும் ஆமிக்காரன்கள். அவங்க தங்கட மேலிடத்து ஓடரைத்தான் செய்வாங்க.”

“உங்களோடதானே அந்த ஆமிக்காரன்கள் நல்லாக் கதைப்பாங்கள் எண்டு சொன்னீங்கயல்ல... அவங்கட்டயாவது சொல்லிப் பாருங்கவன். அப்படிக் கேட்டு சரிவந்தால் மெத்தப்பெரிய உபகாரமாக இருக்கும் நம்ம ஊருக்கு. எனக்கு உடம்பெல்லாம் என்னவோ செய்யிறமாதிரி இருக்குது. நாரி வேற உழைவாயிருக்கு. காய்ச்சல் கீச்சல் வருகிறமாதிரி போல இருக்கு. நான் தூங்கப்போறன்.” என்று எலிசபேத் சொல்ல, “அப்ப இரண்டு ‘டிஸ்பிறின்’ வாங்கிக்கொண்டு வருவாங்க போட்டுட்டு படுத்தா கொஞ்சம் சுகமாக இருக்குமல்ல.” என்று அந்தோனி கேட்டான்.

“வேணாப்பா... நாளைக்கும் இதேமாதிரி இருந்தா காலையில பார்த்துக் கொள்ளலாம். இப்ப நான் தூங்கப்போறன்.” என்று தூங்கப் போனவள்தான் இப்ப எழும்ப இயக்கம் இன்றி வார்த்தைகள் வந்தபோது, அந்தோனிக்கு எலிசபேத்தின் நினைவு அனிச்சையாக வெளிப்பட்டு விலகிச் சென்றது.

“இஞ்சேரப்பா நான் கேட்டதற்கு ஒண்டும் பறையாமல் கொள்ளாமல் நிக்கிறையள். என்ன நடந்தது...?” மின் விளக்கு போடப்படாத இருள் சூழ்ந்த அறையில் இருந்து, குரல் அந்த அமைதியைக் கிழித்துக்கொண்டு அந்தோனியின் காதில் விழுந்தது. அந்தோனி கோடிப்பக்கமாக மின் விளக்கின் வெளிச்சத்தில் ‘கடிப்பைத்’ தேடிக்கொண்டிருந்தான்.

“எழும்பி தேத்தண்ணி போட்டுத்தர வாங்க...?” மீண்டும் ஒடுங்கிய குரலில் எலிசபேத் கேட்டாள்.

“இந்த நேரத்தில எதுக்கு உனக்குச் சிரமம். கடலுக்குப் போகேக்க சந்தியிலிருக்கிற அப்துல்லா காக்ககிட்ட குடிச்சுப் போட்டு போறன்” என்றான் அந்தோனி. எலிசபேத்து நேற்று தன் உடல் நிலை பற்றிச் சொன்னதை நினைவு வைத்துத் தான் இதைச் சொல்லியிருக்கலாம்.

“சில்லறைக்காசு உங்கட்ட கிடகோ...?”

“இல்லையப்பா...”


“என்ர பச்ச மைல் சீலை மூலையில் முடிஞ்சு வைச்சிருக்கிற சில்லறைக் காசை எடுத்துக்கொண்டு போங்க...”

“சரியென எடுத்துக்கொண்டு போறன். நீங்க தூங்குங்க...” என்று சொல்லிக் கொண்டு மாறனையும் கூட்டிக்கொண்டு கடலுக்குப் போவதற்குப் புறப்பட்டார்கள்.

மங்கலான வெளிச்சத்தில் வீதி விறைத்துக் கிடந்தது. துயரத்தில் தோய்ந்து இருப்பின், ஈடாட்டத்தை இரவு சுமந்து கிடந்தது. கடற்கரையின் மெல்லிய அலையசைவு இராணுவம் தங்கியிருக்கும் கட்டடத்தின் பின்பக்கக் கரையை மோதிக்கொண்டிருந்தது. ஊதல்காற்றின் வீச்சில் பூமி குளிர்ந்திருந்தது. காவலரண்களில் லாம்பின் வெளிச்சத்தில் கடல் செல்வதற்காகக் காத்திருக்கும் மீனவர்கள் நேர்வரிசையில் நின்றார்கள். ஒவ்வொருவரிடம் இராணுவம் அடையாள அட்டையை வாங்கிப் பதிவு செய்தபின், காவலரணுக்குள் இருக்கும் ஒரு சிறிய பெட்டிக்குள் அடுக்கிவைத்தார்கள். அந்தோனி அடையாள அட்டையைக் கொடுத்து, பதிவு செய்துவிட்டு கடற்கரைக்கு வந்து தோணியில் ஏறி மரக்கோலால் தாங்கத் தொடங்கினான். அந்தோனி கடையால் பக்கமாக நின்று தாங்க, மாறன் அணியப் பக்கத்தில் வாங்கில் இடது காலைத் தாங்குவதோடு வள்ளம் போகும் திசையைக் கவனமாகச் செலுத்தினான். சிலர் குறுக்குமறுக்காக களங்கண்ணி வலையை துறையால் பாஞ்சதால் அந்த வலைகளை அறுத்துக்கொண்டு போகாமல் அவதானமாகத் தாங்கிக் கொண்டுபோனார்கள்.

களங்கண்ணி வலைகள் பல வெள்ளை பறிந்துகிடந்தது. நிலவுகாலம் நெருங்குகின்றது. இனிமேல்தான் எல்லோரும் வலையைப் பிடுங்கி துவர்ப்பட்டை போட்டு, அவிச்சு மீண்டும் இருட்டு வந்தவுடன் கடலில் புதைப்பார்கள். அந்தோனி கொஞ்சம் வித்தியாசமாகச் செய்வான். களங்கண்ணி வலை இரண்டு கடலில் நிற்கும்போது, வீட்டில் எப்போதும் இரண்டு களங்கண்ணி வலையைப் பொத்தி, அவிச்சு, காயப் போட்டு மேலதிகமாக வைத்திருப்பான். நிலவுக்காலம் வந்தால் வெள்ளி பதிந்த வலையைப் பிடுங்கி வீட்டுக்குக்கொண்டு வந்துவிட்டு, வீட்டில் இருக்கும் வலையை அடுத்தநாளே கடலில் புதைச்சுவிடுவான். நிலவு காலத்தில் இறால் பிடிபடாவிட்டாலும், சில மீன்சாதி வலைக்குள் அகப்படும் என்பதற்காக.

கிழக்கால் வெள்ளாப்புக் கொடுத்துக் கொண்டிருந்தது. முனங்குப் பக்கம் இருந்து, கொண்டல் காற்று விடாமல் மூசிக்கொண்டிருந்தது. களங்கண்ணி வலையை அந்தோனியின் வள்ளம் நெருங்கிக்கொண்டிருந்தது. கடல் காகங்கள் கடலுக்குள் விழுந்து விழுந்து மீனைக் கொத்திக்கொண்டு மேல் நோக்கிப் பறப்பதும், மீண்டும் கடலுக்குள் மூழ்குவதுமாக இருந்தது. வள்ளத்தை விரைவாகத் தாங்கினார்கள். கடல் சாதாளையைக் கிழித்துக்கொண்டு வள்ளம் வேகத்தில் முன்நோக்கிப் பாய்ந்து, பாய்ந்து போனது. மாரிகாலம் என்பதால், துறைக்கரைகூடக் கொஞ்சம் ஆழமான கடல் பகுதிபோல் இருக்கும். கடலின் நீர்ப் பரப்பில் வெண்நாரைகள் தென்றல்போல் அசைந்துகொண்டு போனது. மாரிகாலங்களில்தான் அநேகமாக ‘சுணைநீர்’ மீனவர்களுக்கு பிடிப்பது வழக்கம். ‘சுணைநீர்’ தொழிலாளிகள் மீது மெல்லப் பட்டாலும், உயிரைக் கொல்லும் அளவுக்கு உடலை வருத்திப் பாடுபடுத்திவிடும். அப்படி யாருக்கும் சுணைநீர்பட்டால், அடுத்தநாள்வரை அந்த வலி தாங்க முடியாமல் தவிப்பார்கள். கொஞ்சம் வசதி உள்ளவர்கள், யாழ்ப்பாண பிரதான வீதியில் உள்ள டொக்டர் பிலிப்பிடம் போனால், அவர் கொடுக்கிற மருந்துடன் அந்த வலி மறைந்துபோய் விடும். இந்தச் சுணைநீர் எப்படி கடலில்... ? அதுவும் மாரி காலத்தில்தான் திடீரெனத் தோன்றுகிறது என்றால், யாழ்ப்பாணப் பெரியாஸ்பத்திரியில் இருந்து இரசா யனக் கழிவுக் கூறுகள், கழிவுக் குழாய் கள் வழியாக பண்ணைப் பக்கமாக கடலோடு கலக்கிறது. இந்தக் கழிவு நீர்தான் கடலில் கலந்து மாரிகாலத்தில் ஒரு வகையான இரசாயன பதார்த்தம் போல் கடல் நீரின் மேற்பரப்பில் கண்ணுக்குப் புலப்படாமல் மிதந்து செல்கிறது. தற்செயலாகவே தொழிலாளிகள் மீது பட்டுவிடுகிறது. இது காலம் காலமாய் இருந்துவந்ததா என்று பார்த்தால் அதுவும் கிடையாது. ஒரு குறிப்பிட்ட ஆணடுகளுக்கு முன்னர்தான் இந்த ‘சுணைநீர் பிடிச்சது’ என்ற வார்த்தைப் பிரயோகம் புளக்கத்தில் வந்தது. இதை நிவர்த்தி செய்ய எவரும் முன் வரவில்லை. சுணை நீர் உடலில் படும்போது, அது வழுக்குண்டு போய்விடும் என்பதால், அந்தோனியின் வள்ளத்துக்குள் எப்போதும் ஒரு போத்த லில் தேங்காய்யெண்ணை நிரப்பி வைத்திருப்பார்.



அந்தோனி வள்ளத்தை வலையோடு அணைத்துக் கட்டினான். போத்தலோடு இருந்த தேங்காய்யெண்ணையை எடுத்து அந்தோனியும், மாறனும் உடம்பு முழுக்கப் பூசிக்கொண்டு, கடிப்போடு வலைக்குள் இறங்கும்போது, கடல் தண்ணியைத் தொட்டு அந்தோனி பிதா சுதன் போட்டுவிட்டு இறங்க, அதன்பின் மாறனும் அதே மாதிரிச் செய்துகொண்டு கடலில் இறங்கினான். முதல் இழுப்பை இழுத்து மாட்டி வள்ளத்துள் போட்டார்கள். மீண்டும் அடுத்த இழுப்புக்காக மாறன் கடிப்பின் ஒரு பக்கத்தை கையால் வலையின் வாசல் பக்கத்தை மறைத்தபடி நிற்க, அந்தோனி சுற்றி இழுத்துக்கொண்டு வந்தான். சிறகு வலைக்குள் கிடக்கின்ற, கடல் உணவுகள் அனைத்தும் கடிப்பைப் போட்டு இழுப்பதன் மூலம் அகப்பட்டுவிடும். சிலவேளை, கடிப்பை வளைத்து இழுக்கும்போது மீனோ, றாலோ கழிந்துபோய்விடும். அதற்காகத்தான் ஒருமுறை மட்டும் இழுக்காமல் இரண்டு அல்லது மூன்றுமுறை இழுப்பது வழக்கம். மூன்றாவது முறையாகவும் வலை இழுத்துவிட்டு, கடிப்பை வள்ளத்துக்குள் வைத்துவிட்டு, வள்ளத்துக்குள் மாறன் ஏறினான். வலை வெள்ளை பதிந்து போய்விட்டதால், வீட்டில் துவர்வைத்து காயப்போட்டு கட்டிவைத்திருக்கும்

வலையை நாளை கொண்டுவந்து புதைப்பதற்காக அந்தோனி வலையைப் புடுங்கத் தொடங்கினான்.

மாறன் வள்ளத்துக்குள் இருந்துகொண்டு மீனைத் தனியாகவும், றாலைத் தனியாகவும் தெரிவு செய்து, அந்தத் தாங்கிற்குள் போட்டுக் கொண்டிருந்தான். உப்பிய வயிறோடு, உயிரோடு வள்ளத்தின் நடுவங்குப் பக்கமாகக் கிடந்த பேத்தை மீனை, நண்டுத் தொழிலுக்குப் போறவர்களுக்குக் கொடுப்பதற்காக கடையால் பக்கமாக வீசி எறிந்தான். வீசிய பேத்தை மீன் கடையால் பக்கமாகக் கிடந்த தண்ணீருக்குள் விழ வள்ளத்தின் உட்பரப்பில் உப்புத்தண்ணீ சிதறியது.

"மாறன்" என்று அந்தோனி கூப்பிட வள்ளத்துக்குள் குனிந்து கொண்டிருந்த மாறன் தலையை நிமிர்த்தி தந்தையைப் பார்த்தான்.

"என்னப்பா கூப்பிட்டியளே...?"

"ஓம் மாறன்... கம்புகளை கடலில் விட்டிட்டு போவமா...?"

"ஏனப்பா யாராவது களவெடுத்துக்கொண்டு போகமாட்டாங்களா...?"

"என்னத்த புடுங்கிக் கொண்டு போகப் போறாங்க... நாளைக்குக் காலையிலேயே வீட்டில இருக்கிற துவர்வைச்ச வலையைக் கொண்டு பாயிறதுக்கிடையில... கம்பையும் புடுங்கிக்கொண்டிருந்தால் உனக்கு ரீயுசனுக்குப் போறதுக்கு நேரம் போய்விடும்."

"அப்பா! கம்பில கொட்டலசு இல்லையோ...?"

"இல்லையடா மாறன்..."

"அப்பா! அப்ப புடுங்காமல் கம்பை கடலிலேயே விட்டிட்டுப் போவம்..."

"ம்... மாறன், மீனையும் றாலையும் தெரிஞ்சு போட்டிட்டு நடுப் பலகைப் பக்கமாக நிண்டுகொண்டு வலையில அப்பிக்கிடக்கிற சொளியை வள்ளத்தில அடிச்சுப்போட்டு வள்ளத்துக்குள் ஏத்து மாறன்..."

"ஓமப்பா... தெரிஞ்சிட்டன். அந்தத்தாங்கை கடையாலுக்குள்ள வைச்சுப்போட்டு வலையை ஏத்துறனப்பா" என்றான் மாறன்.

"மாறன் முதலில்ல சிறகை அடிச்சுப்போட்டு ஏத்து... அதுக்குப் பிறவு நிலவலையை ஏத்தி ஒரு வங்குக்குள்ளே கிடக்கக்கூடிய மாதிரி போட்டுவிடு" என்றான் அந்தோனி.

"ஓம் அப்பா" என்று சொல்லிக்கொண்டு நடுப்பலகைப் பக்கமாக வந்து, வலையை வலது கையால் பிடித்து, வள்ளத்தின் பலகையின் வெளிப்பரப்பில் அடிப்பதும், பின் கடலில் தோய்த்து வள்ளத்துக்குள் வலையை ஏத்தத் தொடங்கினான் மாறன்.

வானம் மப்பும் மந்தாரமுமாய் இருந்தது. மழை வருவதற்குரிய சாத்தியக்கூறுகள் அதிகமாய்க் காணப்பட்டது. இடி மின்னல் என்று அடிக்கடி எட்டிப்பார்த்துக்கொண்டிருந்தது. கருமேகம் திரட்சியாய் வானத்தில் தோன்றிய போதும், வெண்மேகமும் அங்கொன்றாய் இங்கொன்றாய் வியாபித்துக் கிடந்தது.

"அளப்புளு" கடலின் நீர் மட்டத்தில் சில மிதந்தும், சில கடல் மட்டத்தில் தாண்டும் கிடந்தன. அளப்புளு ஒரு மீன் வகையல்ல. ஆனால் அது பூ வடிவில் அழகாய் இருக்கும். அதைத் தொட்டால் ஒரு வகை கடி தோன்றும். அதுவும் கொஞ்ச நேரம் மட்டும்தான். பரவைக் கடலில் மட்டுமே இது காணப்படும். கெலுறு மீன், ஜப்பான் மீன் போன்ற மீன்களும் மிக ஆழம் குறைந்த சதுப்பு நிலம் கொண்ட துறைப்பகுதியிலே காணப்படும். சாதளை என்றொரு செடி வகையும் இந்தப் பகுதியில் வளர்ந்து நீட்டி நிமிர்ந்து கிடக்கும். கடலில் நடக்கும்போது, சாதளை கால் கைகளை வெட்டிக்கிழித்துவிடும்.

இதைவிட "ஆர்க்கு" என்று ஒரு சிப்பி வகையும் சில இடங்களில் ஆவெண்டு கடலின் நில மட்டத்தில் விளைந்துகிடக்கும். மீனவர்கள் நடக்கும்போது கால் இதன்மீது தடுமாறி வைத்தால், பெரிய கத்தியால் வெட்டியதுபோன்று ஆழமான வெட்டுக்காயத்தை உண்டுபண்ணிவிடும். நரிச்சுங்கான் என்றொரு மீன் வகை உண்டு. இது அழகாக வரிக் குதிரைகளில் விழுந்திருக்கும் கோடுகள்போல் உடல் முழுவதும் கொண்டிருக்கும். இது சில மனிதர்கள் வெளித்தோற்றத்துக்கு நல்லவர்கள் போல் நடித்துக்கொண்டு, உள்ளே விசத்தை சுமப்பவர்கள்போல் இருக்கும். பார்ப்பதற்கு மிக அழகாய் இருக்கும். சுங்கான் மீன் மீது கை தடுமாறி உடலின் மேற்பரப்பில் இருக்கும் முள்ளின் மீதுபட்டால், உயிர்போக வலி எடுக்கும். இது கடலின் மேற்பரப்பில் ஒரு கூட்டமாகவே நீந்தித் திரியும். களங்கண்ணி வலைக்குள் கூட ஒரு கிளையாகத்தான் மாட்டிக் கொள்ளும். இவையெல்லாம் கடலில் கிடந்து மீனவர்களைத் துன்புறுத்தியபோதும், கடல்தான் அவர்களுக்கு கடவுள்போல...

வதவதவென்று வலையை வள்ளத்தில் அடித்துக்கொண்டு சிந்தனையில் நின்ற மாறன் திடீரென ஏதோ தோன்ற...

"அப்பா" என்று கூப்பிட்டான்.

"என்ன மாறன்" என்று பதிலுக்கு அந்தோனி கேட்டான்.

"அப்பா...! உங்களுக்கேனப்பா அந்தோனி எண்டு அப்பு பெயர் வைச்சவர்...?"

அப்பு அந்தோனியார் மீது பற்று வைத்தவர். அதனால் அந்தோனி என்று பெயர் வைத்தவர். ஆனால் நான் தமிழ்ப்பற்றுள்ளவன். அதனால் மாறன் என்ற பெயரை உனக்கு வைத்தனான்.

"அப்பா! அப்புவட காலத்தில தமிழ் பற்றுயில்லையோ...?"

"இல்லையெண்டு சொல்ல முடியாது... நாற்பத்தெட்டுக்கு முதல் நம்மள வெள்ளையன்தான் ஆட்சி செய்தான். அப்ப மொழிப் பற்று நம்ம சனத்திட்ட இருந்தாலும், என்ர ஐயாவுக்கு இருந்த மாதிரித் தெரியல்ல... அவருக்கு கிறிஸ்தவ மதத்தைத் தவிர பெரிசா எதிலும் பற்றற்றவராகத்தான் சாகும்வரையில் இருந்தவர். நம்மட மூதாதையர் கிறிஸ்தவர்களாக இருந்ததற்கான எந்தச் சாத்தியக்கூறுகள் எதுவும் கிடையாது. ஒல்லாந்தர், போத்துக்கீசர் இங்கு வந்த பிறவுதான் கிறிஸ்தவம் பரப்பப்பட்டது. பெரும்பாலும் கரையோரப் பிரதேசத்தை அண்டியே பரப்பப்பட்டு, நன்றாக வளர்ந்திருக்குது..." அந்தோனி வைத்த பிரசங்கத்தைப் பேசாமல் பறையாமல் மாறன் வள்ளத்தில் நின்று கேட்டுக்கொண்டு நின்றான்.

அந்தோனி நிலவலையைப் பிடுங்கிக்கொண்டு... நிலவலையோடு கட்டப்பட்ட "றால் கூட்டை" வலையிலிருந்து பிடுங்கி, றால் கூட்டின் முன்பக்கமாக வட்ட வடிவில் வலைக்குள் கோர்த்திருக்கும் இரும்புக் கம்பியை இடது கையால் பிடித்துக்கொண்டு, வலது கையால் அந்தோனி வளைத்தான். நீண்டு வட்ட வடிவில் பின்னப்பட்ட றால்கூட்டு வலை... றால் பிடிப்பதற்காக பிரத்தியேகமாக களங்கண்ணி வலையில் வைக்கப்படுவது. றால்கூட்டை வளைத்துக் கொண்டு வந்த அந்தோனி அடிப் பக்கமாக எல்லாறாலும் சேர்ந்து கிடக்கும் என்ற நம்பிக்கையோடு, "தூர்ரை" கையால் வளைத்துப் பிடிக்க, றால் கூட்டுக்கள் ஒரு மச்ச சாதியிடம் இல்லாமல் கிடந்ததைக்கண்டு, அந்தோனி விக்கித்துப்போனான்.

அந்தோனி வள்ளத்துக்குள் நின்ற மாறனைப் பார்த்து...

"மாறன் றால் கூட்டில ஒரு மச்சசாதியையும் இல்ல... யாரோ வெள்ளனத்தோடு வந்து தட்டிக் கொண்டு போய்விட்டாங்க" என்றான் அந்தோனி.

"அப்பா வெறும் கூடுதானா இருக்கு..."


"ஓம் மாறன் வெறும் கூடுதான் என்ர கையில இருக்கு... இது மட்டுமல்ல வெறுங்கூடு...

அங்க பார் என்று சொல்லிக் கொண்டு கையை பரலோகமாதா கோயிலுக்கு முன்பாக இருக்கிற சனசமூக நிலையக் கட்டட வளவுக்குள்ள இருக்கிற இந்திய ஆமிக்காரனின் காவல்கூட்டை காட்டிக்கொண்டு... "இந்தக் காவல்கூட்டினால் நாங்கள் படும் துன்பம் கொஞ்ச நெஞ்சமில்ல... ஒருநாள் நம்மட பொடியள் அவங்கள அடிச்சு, கலைச்சு விடுவாங்க அப்ப அதுவும் வெறும் கூடாய்த்தான் இருக்கும்..." என்று அந்தோனி சொல்ல; மாறன் உன்னிப்பாய்க் கேட்டுக்கொண்டு நின்றான். *

# அரளி பூக்கும் சினிமா!

வீட்டு முற்றம் பேசும் மணலில் கீறல்கள்- ஓடித் திரியும் கால் தடங்களாகவும் அமர்ந்திருந்து, ஒரு வயதில் விரலால் கிறுக்கி அழித்த தடங்களாகவும் மல்லிகை பூக்கும் முற்றத்து மரங்களாகவும் இல்லாமல்,

பிறந்த அடையாளம், தாய்மொழி, வாழ்ந்த குடிமனை அனைத்தும் மறைக்கப்பட்டு, வெளிப்படும் உருவங்களின் மாற்றங்கள் எம்மை மாற்றிவிடத் துடிக்கின்ற



திரைப்படங்களில் வியப்பூட்டி நிற்கின்ற இளம் சமூகத்தின் கற்பனை கோளங்கள் அன்றே அழிந்து விடுகின்றது.

நிறத்தில் குளிரும் கண் இமைகளுக்கு தூங்கிவிட இலகுவாக இருக்கின்றபோதும் விழித்திருக்க வேண்டி இருக்கிறது. விரல்களின் நடுக்கத்துக்கும், விரல் இடுக்கேயுள்ள சீக்கிரெட்டிற்கும் நிறைய இடைவெளி இல்லாதது போல எம்மில் ஒட்டிக்கொண்டு சினிமாவாக அரளி பூக்கிறது.

வேடிக்கையாகப் பார்ப்பவர்களுக்கு வினோதமாக அசையும் கட்டடங்களில், வீட்டில் அடைபடாமலும் மனசு தாவிப் பாயும் நிகழ்வுகளில் ஒன்று சினிமா ஆனபடியால் தான், ஒரு நபர் நூறு பேரை அடித்து வீழ்த்தும் காட்சி நம்பப்படுகிறது.

இதில் மொழியானது மலையாளப்படங்களில் ஒட்டியும், ஆங்கிலப்படத்தில் அழகுபடுத்தியும் தமிழ்சினிமாவில் அசிங்கப்பட்டும் இருக்கிறது.

பார்வையாளர்கள் விரும்புகின்றார்கள் என்று பழக்கப்படுத்தப்படுகின்ற எமது பார்வைக்குள், கூடுதலாக சினிமா வீழ்ந்து கொண்டிருக்கிறபோது, எம்மை மட்டும் எழும்ப விடாது உணர்வுக்குள் இருந்து கொண்டு தொடர்ந்தும் அதே நிகழ்வுகள் திரும்பி திரும்பிக் கொண்டிருக்கிறபோது, கதைகள் அல்ல அதன் நவீனத்திற்கு இடையில் காட்சிகள் பிரமாண்டமானதால், மலை உச்சியில் இருந்து கொண்டு கீழே பார்க்கின்ற எமது உணர்வுகள் மழுங்கடிக்கப்படுகிறது.



பாடலுக்கு வரி, ஆட்டத்துக்குத் தாளம் அதற்கான இடம், உடை எதுவும் எம்முடையதல்ல. நெல் அறுக்கும் பெண்களின் குழுமிப்பாட்டும், குழந்தையை தொட்டிலில் தூங்கவிடும் தாலாட்டுப் பாட்டும், ஆடு மேய்க்கும் கிழவனின் தனிமைப்பாட்டும் மறைந்து நாளாகிவிட்டது.

திரையரங்குகளில் கூட்டம் அதிகமான படங்களில் கை தட்டல்கள் வாங்கும் காட்சிகளைப் பார்க்கின்ற இயக்குநர்களின் கைவரிசை, அந்தக் காட்சி அமைப்புகளை வடிவொத்ததாக இருக்கிற அந்தப் பாதையில் இருந்து விலக முடியாததாகி விடுகிற தயாரிப்பாளர்களின் கைக்குள் சிக்குண்டு இருக்கிறபோது எமக்கான நல்ல தரமான படத்தினை எதிர்பார்க்க முடியாததாகிவிடுகிறது.

***படத்தினைப் பார்த்து விட்டு வெளியே வருகின்ற பார்வையாளர்களிடம் படத்தினைப் பற்றிக் கேட்கின்றபோது. சூப்பர் என்று சொல்லும் வார்த்தைக்குள் அந்தப் படம் மோசமாகி விடுவது தெரிகிறது.***

காட்சிகள், தமிழர்களைப் புறந்தள்ளும் அசைவில் வசனங்களும், வடிவமைப்புக்களும், பாடல்களும் அதன் உருவங்களும் தணிக்கைப் பிரிவினரால் உரிமை கொடுத்து வெளியிட அனுமதி கொடுக்கும் போதுதான் மணிரத்தினம் பாலச்சந்தர், சங்கர் போன்ற இயக்குநர்கள் சிகரமானார்கள்.

படரும் கொடியின் மென்மையிலும் உயர வளர்ந்து சுற்றிக்கொண்டு பந்தல் ஆனது போல்- இலட்சியம், குறிக்கோள் அதனுள் வளைந்தாலும் மேலே சென்று வருகிற விடுதலையில் போராளி மண்ணோடும் மக்களோடும் சேர்ந்து நிற்கின்றான்.

உயிரே, பம்பாய், ரோஜா, கன்னத்தில் முத்தமிட்டால், ஆயுத எழுத்து போன்ற திரைப்படங்கள் போராளியின் உருவம், செயற்பாடுகள், இலக்கு அனைத்தையும் வித்தியாசப்படுத்தி, போராளியாக கதாநாயகன் வரும் காட்சிகள் ஒவ்வொன்றும் இயக்குநர் மணிரத்தினத்தையும் சேர்த்து தலைகுனிய வைக்கிறது.

இந்தியன், முதல்வன், போய்ஸ், அந்நியன் போன்ற படங்களை இயக்கிய சங்கர், கணினியைப் பயன்படுத்தி எம்மை கோமாளியாக்கி விடுகிற விந்தையெல்லாம் காட்சிகளில் நன்கு தெரிகிறது. கணினியாலும் எமக்கு ஒத்துவருகின்ற, நம்பத்தகுந்த காட்சிகளை வடிவமைக்க முடியும் என்றபோது, முடியாத செயற்பாடுகளை முடியும் என்றும் நம்பவைக்கும் காட்சிகள் வியப்புக்குள் உள்ளாக்கிவிடுகின்றபோது, வியாபாரமாவது, எமது சமூகம் வீணாகிப் போவதும் தெரிகிறது.

பெண்விடுதலையானது பல துன்பங்கள் மத்தியில் பிறப்பிக்கப்படுகிறது. ஆனால் தவறான நடத்தையில் சென்று அவள் தன்னை அடையாளப்படுத்தும் பாலச்சந்தர் தன்னுடைய படங்களில் காட்சிகள் ஒவ்வொன்றும் பெண்களை இழிவுபடுத்திச் செல்கிறது.

ஏனைய புதிய வரவு இயக்குநர்கள், காதல் ஆடம்பரத்தில் செல்வந்தர்களிடம் மட்டும் ஜெயிக்கிறது என்று கற்பனையில் பூசி மெழுகப்பட்டு, தாஜ்மகால் போல அசிங்கப்பட்டு நிற்கிறது.

உண்மையும், அதன் நிழலும் மனிதனோடு ஒட்டி நகருகின்ற போது, அன்றாட நடைபாதையில் எத்தனைபேரின் முகங்களில் முகம் மறைத்த போதுதான் வாழ்வில் எம்மை நிலையாக தக்க வைக்க முடிகிறது. அதேபோல் காட்சிகளில் எமது ஊரும், அதன் அடையாளங்களும் இயற்கையோடு, உண்மைக் கருத்துக்களை சொல்லி விடுகின்ற தைரியம் இயக்குநர்களிடம் இல்லாத போது, எப்படி நல்லதொரு படத்தினை எதிர்பார்க்க முடியும்.

அலை மோதும் திரையரங்குகளில் நல்ல படத்தினை எதிர்பார்க்க முடியாது. ஆனால் திரையரங்குகளில் வரும் படங்கள் இப்படித் தான் வரும் என்று எதிர்பார்க்க முடியும். கூட்டத்துடன் கூட்டமாகச் சேர்ந்து படம் பார்க்காவிட்டாலும், இரண்டு மணி நேரம், கூட்டத்துடன் சேர்ந்து முண்டியடித்து நுழைவுச் சீட்டினை எடுத்து உள்ளே சென்று உட்கார்ந்துவிட்டு, வெளியே வரும் என்னிடம் படத்தினைப் பற்றிக்கேட்கக் கூடாது.

திரையரங்குகளில் கூடுதலான நாள் படம் ஓடினாலும், விருதுகள் பல எடுத்தாலும், நல்லதொரு திரைப்படப் பட்டியலில் இருந்து விலகிவிடுகின்ற இன்றைய சூழலில் எத்தனை நாட்கள் படம் ஓடுகிறது என்பது முக்கியமல்லாமல் போய்விடுகிறபோது, சிறந்த பார்வையாளர்களை எதிர்பாக்க முடியாமல் போய்விடுகிறது.

செல்வா.

# கிளிநொச்சி மாவட்டத்தில் துரிதகதியில் வீடமைப்புத் திட்டத்தை முன்னெடுக்க நடவடிக்கை

கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் துரித வீடமைப்புத் திட்டங்களை முன்னெடுக்கும் வகையில் முன் ஏற்பாடுகளையும், ஒதுக்கீடுகளையும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்திலான உயர் அதிகாரிகள் குழு கிளிநொச்சி அரச செயலகத்துக்கு வருகைதந்து, அண்மையில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியது.

இதேவேளை, பிரதேச செயலகங்கள் ஊடாக வீடுகளை அமைக்கும் நோக்குடன் பொது மக்களுக்குக் காணி அனுமதிப் பத்திரங்களை வழங்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி செயலக உயர் அதிகாரி மற்றும் பிரதேச செயலர்கள், காணி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கடந்தகால யுத்தத்தின்போது இந்த மாவட்டத்தில் 25 ஆயிரத்தும் அதிகமான வீடுகள் அழிந்தன.

தற்போது பூநகரி பிரதேச செயலர் பிரிவில் சுமார் 500 வீடுகளும், பளை, கரைச்சி, கண்டாவளைப் பிரதேச செயலகப் பிரிவுகளில் ஒரு குறிப்பிட்ட தொகை வீடுகளுமே புதிதாக அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கழிமோட்டை நலன்புரி நிலைய மக்கள் காணி உரிமையாளரால் வெளியேற்றம்

மன்னார்

மன்னார்- நானாட்டான் கழிமோட்டை நலன்புரி நிலையத்திலுள்ள மக்கள் தொடர்ச்சியாக பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்த மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 68 குடும்பங்கள் இந்த நலன்புரி நிலையத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நலன்புரி நிலையம் அமைந்துள்ள காணியின் உரிமையாளர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ததை அடுத்து மன்னார் அரச அதிபர் இந்த நலன்புரி நிலைய மக்களை எந்த வித ஏற்பாடுகளும் செய்து கொடுக்காமல் -

இந்த மக்கள் சொந்த இடங்களுக்குச் செல்லுமாறு உத்தர விட்டுள்ளதை அடுத்து, இந்த நலன்புரி நிலையத்தில் வாழ்ந்து வரும் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

## மலசலகூடம் அமைப்பு

இராமநாதபுரம்

கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு கழகத்தால், ஒக்ஸ்பாம் நிதியுதவியுடன் மாயவனூர் கிராம மக்களுக்கு இரண்டாம் கட்டமாக 70 பயனாளிகளுக்கு மலசலகூடம் கட்டுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன. (இ)

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஜூலை-25

1616: இன்றைய இரசாயனவியலில் முதல்பாட நூல் எனக் கருதப்படும் அல்க் கெமியா என்ற நூலை எழுதியவரும், அமோனியம் சல்பேட்டை முதல்முதல் வெற்றிகரமாக தயாரித்துக் காட்டியவரும், இரசாயனவியலில் பல புதிய பகுப்பாய்வு முறைகளைக் கண்டுபிடித்துத் தந்தவருமாகிய ஜேர்மனியின் புகழ்பெற்ற விஞ்ஞானி அண்ட்ரியாஸ் லிபாவியாஸ் மரணமடைந்தார்.

1843 பிளீச்சிங் பவுடர் தயாரிக்கும் செயல்முறைகளைக் கண்டுபிடித்தவரும், மழைக் கவசம் தயாரிக்கப்பயன்படும் நீர் புகாத துணியைக் கண்டுபிடித்தவருமான பிரித்தானியாவைச் சேர்ந்த சார்ஸ் மாகின்டோஸ் மரணமானார்.

1921 அமெரிக்காவும், ஜேர்மனியும் சமாதான உடன்படிக்கையில் ஒப்பமிட்டன.

1928 அமெரிக்கா, சீன உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது. இந்த உடன்படிக்கைப்படி சீனாவில் சுங்கத்தீர்வையை நிர்ணயிக்கும் உரிமையை அமெரிக்கா பெற்றுக்கொண்டது.

1944 ஜேர்மனியில் போர்ப்பணியில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு விடுமுறைகள் ரத்துச்செய்யப்பட்டன.

1963 வளிமண்டலத்தில் நச்சு மாசு படிவதைத் தடுப்பதற்கான அணு ஆயுத சோதனைகளை நிலத்திற்குக் கிழே செய்து கொள்வதற்கு அமெரிக்கா, ரஷ்யா ,பிரிட்டன் ஆகிய நாடுகள் உடன்பட்டன.

1972 பிரான்ஸ், தெற்குப் பசுபிக்கில் அணு ஆயுத பரிசோதனையை நடத்தியது.

1973 செவ்வாய்க் கிரகத்தை நோக்கி, ரஷ்யாவால் மார்ஸ் -5 என்ற விண்கலம் செலுத்தப்பட்டது. இது 1974.02.14 இல் செவ்வாய்க்கிரகத்தை அடைந்தது.

1978 முதலாவது பரிசோதனைக் குழாய்க் குழந்தை பிறந்தது. பிரிட்டிஷ் மருத்துவர்களான பேட்ரிக் ஸ்டெப்டோ மற்றும் ரோபர்ட் எட்வர்ட்ஸ் ஆகியோரது சாதனையால் பிறந்த இக்குழந்தைக்கு லூயிஸ் பிரௌன் எனப் பெயரிடப்பட்டது.

1983 இலங்கையில் வெலிக்கடைச் சிறையில் சிறைவைக்கப்பட்டிருந்த குட்டிமணி, தங்கத்துரை ஜெகன், தாமு, கந்தையா உட்பட 53 கைதிகள் கண்கள் தோண்டப்பட்டு கண்டதுண்டமாக வெட்டிக் கொலைசெய்யப்பட்டனர்.

1992 25 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் பார்சிலோனாவில் ஆரம்பமாகின.

1993 இதய பூமி-1 என்ற படைநடவடிக்கை மூலம் மண்கிண்டி மலை இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

1994 மண்டைதீவில் நிலைகொண்டிருந்த இலங்கை இராணுவத்தினர் ஏவிய ஷெல் யாழ் மருத்துவமனையில் விழுந்து வெடித்தது பலத்த சேதத்தை ஏற்படுத்தியது.

தொகுப்பு - சந்துரு

# கடற்தொழிலாளர் பிரச்சினை குறித்து பேரவை கூட்டத்தில் ஆராய்வு!



கிளிநொச்சி

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஒருங்கிணைந்த அனுசரணையுடன் கூடிய செயற்திட்டத்துக்கமைய வடக்கு - கிழக்கு மீன்பிடி தொழிலாளர்களின் தொழில் ரீதியானதும், அவர்களது சமூகப் பொருளாதார ரீதியிலுமான அபிவிருத்திகளை மையமாகக்கொண்டு வடக்கு - கிழக்கு மீன்பிடி தொழிலாளர் சங்கங்களின் சமாசங்களை உள்ளடக்கிய கடற்தொழிலாளர் சங்கங்களைக் கொண்ட பேரவையொன்று அண்மையில் நிறுவப்பட்டது.

இந்த அமைப்பின் மாதாந்த ஒன்றுகூடல் நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் கிளிநொச்சியிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நடுவப்பணியகத்தின் கேட்போர் கூடத்தில் அதன் உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் வடக்கு - கிழக்கு சமாசத் தலைவர்கள், செயலாளர்கள், நிர்வாக உறுப்பினர்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இந்த ஒன்றுகூடல் - மீன்பிடித் தொழிலை நாளாந்தம் மேற்கொள்வதில் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகள் பற்றியும், சுனாமி கடல் அனர்த்தத்தால் மீன்பிடித்தொழிலில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகள் குறித்தும் ஆராயப்பட்டதுடன் -

எதிர்காலத்தில் அவற்றை நிவர்த்தி செய்து மீன்பிடித் தொழிலையும், மீன்பிடி தொழிலாளர்களின் சமூக, பொருளாதார அபிவிருத்திகளை ஏற்படுத்தவல்லதான வேலைத்திட்டச் செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாகவும் -

அனைவரது கருத்துப் பரிமாற்றங்களுக்கு மத்தியில் ஆராயப்பட்டு ஆக்கபூர்வமான முடிவுகளும் எடுக்கப்பட்டன.

## வைத்தியர் இன்றி இயங்கும் நெடுங்கேணி மருத்துவமனை

வவுனியா

வவுனியா வடக்கு நெடுங்கேணி சுற்றயல் கூறு மருத்துவமனை சீரான முறையில் இயங்காததால் சிகிச்சைக்குச் செல்லும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த மருத்துவமனையில் 30 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் சிகிச்சை பெற்றுவருகின்ற நிலையில், நிரந்தர மருத்துவர் எவரும் நியமிக்கப்படவில்லை. இதனால் இங்கு சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

## தமிழீழ காவல்துறையினரின் வீதி ஒழுங்கு கருத்தூட்டல்!

கிளிநொச்சி

கிளிநொச்சி திருநகர் ஆங்கில் கல்வி நிலையத்தில் போக்குவரத்துத் தொடர்பான கருத்தூட்டல் நிகழ்வு தமிழீழ காவற்துறையின் நகரப் போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பாளர் சி.சிவகுமார் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கருத்தூட்டல் நிகழ்வில் 100 இற்கும் மேற் பட்ட மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சமூக வலுவூட்டாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை கிளிநொச்சியில்

கிளிநொச்சி

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சமூக வலுவூட்டல் பிரிவால் சமூக வலுவூட்டாளர்களுக்கான பயிற்சிப்பட்டறையொன்று நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி கனகபுரம் கிராமத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பயிற்சிக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெற்ற இந்த நிகழ்வு - சமூக வலுவூட்டல் பிரிவின் பணிப்பாளர் இ. ம. செல்வராசா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரையை சமூக வலுவூட்டல் பிரிவின் பணிப்பாளர் செல்வராசா நிகழ்த்தினார். சிறப்புரையை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் இரவிசந்திரன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து சமூக வலுவூட்டல் பிரிவின் ஆலோசகரும், பயிற்றுவிப்பாளருமான ரஜனி இக்பால் பயிலுநர்களுக்கான ஆரம்பப் பயிற்சியை ஆரம்பித்து வைத்தார். இந்தப் பயிற்சிப் பட்டறையில் ஆண், பெண் என 17 சமூக வலுவூட்டாளர்கள் பயிற்சியில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கிணறு, மலசலகூடமின்றி அவதி

புதுக்குடியிருப்பு

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் - பொதுமக்கள், வணிகர்கள் பூரண இதற்கு ஒத்துழைப்பு வழங்குவதை அவதானிக்கமுடிகின்றது.

இந்தப் பிரதேசத்தில் நகரமயமாக்கல் திட்டம் இடம் பெற்றுவரும் இந்தவேளை - நீண்டகாலமாக கிணறு, மலசலகூடங்கள் இல்லாமை பெரும் பிரச்சினையாகியுள்ளன. இந்த விடயத்தில் யாரும் அக்கறை செலுத்துவதாகத் தெரியவில்லை.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்களுக்கு பல தடவைகள் வணிகர் கழகத்தினர் எடுத்துக் கூறியும் பயனேதும் கிடைக்கவில்லை. இதனால் கலசாரச் சீரழிவுகள், சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்பட நிறைய வாய்ப்புள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (வெ)



கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன், போரூட் நிறுவன நிதியுதவியுடன் பயனாளி ஒருவருக்கு கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தின் பொருளாளரால் நீர் இறைக்கும் இயந்திரம் வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்:- இராமநாதபுரம் செய்தியாளர்)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

சலம்பற்றிச் சால்புஇல செய்யார்மாசு அற்ற
குலம்பற்றி வாழ்தும்என் பார்

-திருக்குறள்

# நமது நோக்கு

## முன்னையிட்ட தீ!

1983 ஜுலையில் இதேநாளில்தான் ஈழத்தமிழினத்துக்கு எதிரான மிகப்பெரியளவிலான இனப்படுகொலை கட்டவிழ்த்து விடப்பட்டது. 1950 களிலும், 1970 களிலும் அரங்கேறிய படுகொலை எல்லாவற்றையும் - மிஞ்சும் அளவுக்கு 1983 இல் மாபெரும் இனப்படுகொலை அரங்கேற்றப்பட்டது.

கறுப்பு ஜுலை என்றும், ஆடிக்கலவரம் என்றும் தமிழ்மக்களால் என்றென்றும் மறக்கமுடியாத நிகழ்வாக இது அமைந்துவிட்டது.

தென்னிலங்கையில் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் வேட்டையாடப்பட்டு பலிகொள்ளப்பட்டனர். தமிழ்மக்கள் உயிருடன் எரிக்கப்பட்டும் - கண்கள் தோண்டப்பட்டு துண்டுதுண்டாக வெட்டிச்சரிக்கப்பட்டதும், சிங்கள பேரினவாதத்தின் உச்சக்கட்ட வெறி உணர்வை வெளிப்படுத்தி நின்றது.

சிறைக்கூடத்துக்குள் இருந்த தமிழ்ப்போராளிகளைக்கொன்று - அவர்களின் இரத்தத்தைக் கொண்டு புத்தர் சிலைக்கு அபிஷேகம் செய்த பாதகர்கள் - குட்டிமணி, தங்கத்துரை போன்றவர்களின் கண்களைத் தோண்டிப் புத்தருக்குப் படைத்தனர்.

தென்னிலங்கையில் இருந்து ஆயிரக்கணக்கான தமிழ்மக்களை அகதிகளாக கப்பலில் ஏற்றி சிங்களப் பேரினவாதம் யாழ்ப்பாணத்துக்குத் துரத்திவிட்டதோடு மட்டுமல்லாமல் - அங்கிருந்த தமிழர் சொத்துக்களைச் சூறையாடியும், நாசப்படுத்தியும் கோரக் களிப்படைந்தது.

அன்று தென்னிலங்கையில் தமிழருக்கு இட்ட தீ இன்றுவரை எரிந்துகொண்டே இருக்கிறது. கடந்த 22 ஆண்டுகளில் சிங்கள பெளத்த பேரினவாதம் இட்ட தீயால் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்துவிட்டனர். இன்றும் பல்லாயிரக்கணக்கானோர் நிரந்த வடுக்களுடன் நடைபிணங்களாக வாழ்கின்றனர்.

பல்லாயிரம் கோடி சொத்துக்கள் அழிந்துபோய் நாடே சூனியக்காடாகிவிட்டபோதும், சிங்களப் பேரினவாதம் இன்றும் கூட தனது வெறியுணர்விலிருந்து சற்றும் விலகிவிடவில்லை.

எப்படி தமிழர்களைச் சிதைக்கலாம், சின்னாபின்னமாக்கலாம் என்ற வெறியில் இருக்கும் சிங்களப் பெளத்த பேரினவாத சக்திகள் - மீண்டும் மீண்டும் போருக்குத் தூண்டி வருகின்றன.

22 வருடங்களுக்கு முன்னர் தமிழ் மக்களை அழித்து - துரத்தி குதூகலித்த சிங்கள தேசம் - இன்று அவர்களை தமிழர் தாயகத்திலிருந்தும் துரத்திவிடக் கனவு கண்டுகொண்டிருக்கிறது.

அம்பாறை மாவட்டத்தை சிங்களக் குடியேற்றங்கள் மூலம் பெருமளவில் அபகரித்த சிங்களப் பேரினவாதம் - அங்கு தமிழ்மக்களை சிறுபான்மையினராக்கியது.

அதேபோல், திருகோணமலையிலும் தனது கொடிய பாதத்தைப் பதித்து தமிழ்மக்களை விரட்டியடிக்க முற்பட்டு வருகிறது. திருமலை நகரில் புத்தர் சிலையை சிங்களப் பேரினவாத சக்திகள் வைத்ததே ஒரு இனக் கலவரத்தை ஏற்படுத்தி - அங்கிருந்து தமிழர்களைத் துரத்திவிடுவதற்குத்தான்.

இப்போதும், கிழக்கில் தமிழ்மக்களுக்கு எதிராகத் தொடரப்படுகின்ற நிழல் யுத்தம் - ஒரு போருக்குள் தமிழர்களைத் தள்ளிவிட்டு, சர்வதேசத்தின் முன்பாக பயங்கரவாத சக்திகளாகக் காட்டி ஓரங்கட்டி ஒழிப்பதற்குத்தான்.


கடந்த 22 ஆண்டுகால யுத்தமும், அழிவும் பெற்றுக்கொடுத்த படிப்பினைகளை கொஞ்சமும் கவனத்தில் கொள்ளாமல் தான் இன்னமும் சிங்களப் பேரினவாதம் கொக்கரித்துக்கொண்டிருக்கிறது.

இந்தப் பேரினவாத அரசியலின் ஊடாக தமது இருப்பைத் தக்கவைத்துக்கொள்ளும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் சிங்கள அரசியல்வாதிகளும், அவர்களுக்குத் துணைபோகும் சக்திகளும் இன்னமும் பாடம் கற்றுக்கொள்ளவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

தமிழ்த்தேசிய இனத்தின் இருப்பையும், அடையாளத்தையும் அழித்துவிடுவதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கும் சிங்களப் பேரினவாதத்தின் போக்கில் மாற்றங்கள் ஒருபோதும் ஏற்படாது.

அத்தகைய மாற்றங்கள் உருவாகாமல், இலங்கைத் தீவில் ஒருபோதும் அமைதி உருவாக முடியாது. முன்னை இட்ட தீ முப்புரத்தை அழித்தது போல் - தென்னிலங்கையில் தமிழர்களுக்கு இட்ட தீயினால் சிங்கள தேசமே நாசத்தை எதிர்கொள்ளப்போகிறது.

## நாடும் நடப்பும்



செய்தி: இலங்கையின் அரசியல் ஸ்திரத்தன்மை மோசமாக பலவீனமாகிக்கொண்டு போவதால் சமாதான முயற்சிகளை அரசால் தொடரவே முடியாதுள்ளதாக சர்வதேச .இராஜதந்திரிகள் கருத்து.

# தமிழரின் அவசியமான கோரிக்கைகளை எந்த அரசாங்கமும் நிறைவேற்றவில்லை!

## எழிலன்குற்றச்சாட்டு



கொழும்பு

பொதுக் கட்டமைப்பு விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகாவின் கருத்தைத் தான்உயர் நீதிமன்றம் எதிரொலித்துள்ளதாக, திருகோணமலை மாவட்ட தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில் -

தமிழ் மக்களின் எந்தவொரு அவசியமான கோரிக்கைகளையும் அரசு நிறைவேற்றியதில்லை. அரசியல்யாப்பின் பெயராலும், எதிர்க்கட்சிகளின் பெயராலும் காலங்கடத்தி பாழ்படுத்தியே வந்திருக்கிறது.

பொதுக்கட்டமைப்பு விடயத்திலும் ஜனாதிபதி சந்திரிகாவின் கருத்துகளைத் தான் உயர்நீதிமன்றம் எதிரொலித்திருக்கிறது. நாம் இதை எதிர்பார்த்ததுதான்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தற்போது முன்வைத்துள்ள கோரிக்கைகளையும் காலங்கடத்திக்கொண்டு போவதை இனியும் அனுமதிக்க முடியாது. அவர்கள் காலங்கடத்தினால், தலைமைப்பீடம் தனது முடிவுகளைச் செயற்படுத்தும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## அடுத்த சில நாட்களுக்குள் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு ஏற்படலாம்?

கொழும்பு

எதிர்வரும் சில நாட்களில் நாட்டில் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையப் பணிகள், சுமார் ஒருமாத காலமாகத் திருத்தவேலைகளுக்காக இடை நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால், பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மண்ணெண்ணெயை இறக்குமதி செய்யத் திட்டமிட்டது.

இதனையடுத்து, மண்ணெண்ணெய் தாங்கிக் கப்பல் திட்ட மிட்ட தினத்தைவிட, சில நாட்கள் கால தாமதமாகவே கொழும்பை வந்தடைவதனாலேயே இந்தத் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அவுஸ்ரேலிய பிரதமரை விமர்சித்த அனுராவுக்கு ஐ.தே.க கண்டனம்!

கொழும்பு

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக அவுஸ்ரேலியப் பிரதமரை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க விமர்சனம் செய்ததற்கு, ஐக்கியதேசியக் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கருத்துத் தெரிவிக்கையில் -

அனுரா பண்டாரநாயக்காவின் விமர்சனம் அவுஸ்ரேலியாவுக்கும், இலங்கைக்கும் இடையேயான இரு தரப்பு உறவை மிகவும் பாதிக்கும்.

உங்கள் வேலையை நீங்கள் பாருங்கள் என்று கடுமையாகச் சொல்லும் அளவுக்கு அவுஸ்ரேலியப் பிரதமர் ஜோன் ஹவார்ட் கூறிவிடவில்லை. ஜனாதிபதித் தேர்தல் குறித்து கருத்துத்தெரிவித்த ஜோன் ஹவார்ட் - அந்த நாட்டு அரசியல் யாப்பின்படி தேர்தல் நடைபெற வேண்டும் என்றே கூறியிருக்கிறார்.

சர்வதேச உறவுகளை இலங் கை வேண்டிநிற்கும் சூழலில், அமைச்சர் பொறுப்பிலிருப்பவர்கள் இதுபோன்ற கடுமையான சொற்களை பயன்படுத்தக்கூடாது.

அரசை மகிழ்விக்கும் வகையில் கருத்து தெரிவிக்காத காரணத்தால், நாம் விமர்சனம் செய்தால் நமக்கு நிதியுதவி தேவை என்றபோது எப்படி அவர்களிடம் போய் நிற்கமுடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## கட்சித் தலைவர்கள் ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளனர்

கொழும்பு

எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அரசியல் செயற்பாடுகள் என்ன என்பது தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சியின் தலைவர்கள் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

எதிர்காலத்தில் நிலவும் அரசியல் நிலைமைகள் தொடர்பாக, பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் அடிக்கடி கலந்துரையாடல்களை நடத்துவதற்கும், அதற்கமைய எடுக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்துவதற்கும் தீரமானித்துள்ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் டி.எம்.ஜயரட்ண தெரிவித்தார். (தே)

## சேது சமுத்திரத் திட்டம் குறித்து ஒகஸ்ட் 1 இல் பேச்சுவார்த்தை



சென்னை

சேது சமுத்திரத் திட்டம் குறித்து இந்தியாவும், இலங்கையும் புது டெல்கியில் பேச்சுவார்த்தைகள் நடத்தவுள்ளதாகப் போக்குவரத்துத்துறை அமைச்சர் டீ.ஆர்.பாலு தெரிவித்தார்.

இந்தத் திட்டம் அமுல் செய்யப்படுவதனால் தமது நாடு பாதிப்புக்குள்ளாகும் என, இலங்கை அச்சம் வெளியிட்டுள்ளதன் காரணமாகவே இந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

இந்திய எல்லைக்குட்பட்ட கடற்பிராந்தியத்திலேயே இந்தத் திட்டம் அமுல் செய்யப்பட விருப்பதாகத் தெரிவித்த அவர் - இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி முக்கியமாகக் குறிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எது எவ்வாறாயிருப்பினும், இந்தத் திட்டம் அமுல் செய்யப்படுவதன் மூலம், இலங்கைகூட தமது காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்து, பெரும் பொரு ளாதார முன்னேற்றத்தைக் காணலாம். இந்தத் திட்டத்தை அமுல் செய்வதன் மூலம் நீரியல் சுற்றாடல் பாதிப்படையும் என அஞ்சத் தேவையில்லை.


அதேவேளை, தற்சமயம் மேற்கொள்ளப்பட்டுவரும் அகழ்வு நடவடிக்கைகளை, காரைக்குடி, அழகப்பா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் அவதானித்து வருவதாகவும் அமைச்சர் டீ. ஆர் பாலு மேலும் தெரிவித்தார்.

சமூக ஆற்றுகை

செல்ரன்

# தெருவெளி அரங்க குழுவினரின் ஊர் அரங்காலயம்

“கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்” என்பது பழமொழி. அந்தக் கோயில்களில் ஊர்கூடி ஒன்று சேர்வது நம் பாரம்பரியம். இன்று அந்த செயற்திட்டத்துக்காக (Theatre project) ஒன்று சேர்ந்தோம், ஊர் தேடிச் சென்றோம், கதைத்தோம், உறவாடினோம். மக்களின் சுமைகளின் பங்கு தாராரனோம்,



வேலையை அரங்கு செய்கிறது. ஊர் ஊராக அரங்குகளை நடத்தும் போது மக்கள் ஒன்று கூடுகிறார்கள், ஆடுகிறார்கள், பாடுகிறார்கள் ஆற்றுகை செய்கிறார்கள். அதன் மூலம் ஒருவரையொருவர் அறிந்து, புரிந்து, உறவு கொண்டு மனித உறவுகளைக் கட்டியெழுப்பும் இடமாக அரங்கு விளங்குகிறது. இதுவே ஊர் ஊராய் அரங்காலயம் என்று அழைக்கப்படுகிறது. ஊர் கூடி மகிழ்ந்து, பயம் களைந்து உரம் பெறும் சமூக செயற்பாட்டுக் களமே ஊர் ஊராய் அரங்காலயம்.

யாழ். பல்கலைக்கழகத்தி நாடகமும், அரங்கியலும் பாடத்தைகற்கும் மாணவர்களாகிய தெருவெளி அரங்கக் குழுவினர் (தேவமுகுந்தன், தர்மலிங்கம், சுதாகரன், அருள்குமரன், உதயசீலன், சுரேந்திரன், செல்ரன், லகுஷா, தட்சாயினி, டிலானி) அரங்கச்

சுனாமியின் தாக்கத்துக்குள்ளான வடமராட்சியின் கரையோரப் பிரதேசம் எங்கும் அவர்களுள் ஒருவரானோம். அவர்களுடனான சந்திப்பின் பலத்தில் எல்லா ஊர் இளைஞர்களையும் ஒரு பலம் சேர்க்க, ஆண்களுக்கான அரங்காலயத்தில் பருத்தித்துறை முனை கடற்கரைப் பாடசாலையின் மண்டபத்தில் சங்கமித்தோம். ஆடிப்பாடி வேகங் கொண்டாடிய இளைஞர்கள்... தங்களின் கவலைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக இருக்க “ஊர் ஊராய் எங்களுக்கான களம் வேண்டும்” என ஆசையுடன் கேட்டும் கொண்டனர்

அவர்களின் விருப்பத்துக்கான தொடர் செயற்பாடாகவே - ஊர் ஊராய் அரங்காலயம் வடமராட்சியின் கரையோரப் பிரதேசமெங்கும் உயிர் பெறுகின்றது. அன்று சக்கோட்டை கடற்

கரைமணல் வெளியை அந்த ஊர் இளைஞர்களாலும், தெருவெளி அரங்க குழுவினராகிய நாமும் சேர்ந்து ஆற்றுகைக்கான இடமாக தயார்ப்படுத்தி அழகுபடுத்தினோம். கட்டு மரங்களை கரையோரம் விட்டு பாய் விரித்தும், புறக்க விட்டனர். ஊர் இளைஞர்கள் வலைகளும், வள்ளங்களும், கட்டு மரப் பாய்களும், உறுதியான கடல் வாசகங்களும்...

*‘கடலம்மா உனக்கென்ன கோபம்*
*- மீண்டும் உன்னிடமே வருவோம்.*
*கடலிட்ட எடுத்தம்*

**ஊர் ஊராக அரங்குகளை நடத்தும் போது மக்கள் ஒன்று கூடுகிறார்கள், ஆடுகிறார்கள், பாடுகிறார்கள் ஆற்றுகை செய்கிறார்கள். அதன் மூலம் ஒருவரை யொருவர் அறிந்து, புரிந்து, உறவு கொண்டு மனித உறவுகளைக் கட்டியெழுப்பும் இடமாக அரங்கு விளங்குகிறது.**

*கடலிட்ட குடுத்தம்*
*கடலிட்டையே எடுப்பம்*
*கடல் கோள் எம்மைக் கொண்டது*
*மீண்டும் கடலை நாம் கொள்வோம்’*

காண்பியங்களாயின. மெல்ல மெல்ல மாலைப் பொழுதுவரை ஊர் எழுச்சி கொண்டு தயாரானது. அந்த ஆற்றுகை வெளியில் ஒன்று கூடினர். சிறுவர்களுடன் ஆரம்பமானது ‘குலைகுலையாய் முந்திரிக்கா’, பசுவும் குலியும் விளையாட்டுக்கள். விளையாட்டின் வேகத்தில் பலம் சேர்த்தனர் ஊரவர்கள். அவர்களின் ஆற்றுகை வெளியினூடே - கடல் வெடித்து, கறுத்த சுனாமி உருவங்களாக ஆற்றுகையாளர்கள் கிளம்பினர். சுனாமி மீதான ஆத்திரத்தையும், வெறுப்பையும் வெளிக்காட்டி நின்ற மக்கள்- மணல், கற்கள் கொண்டு எறிந்து கலைத்து அடித்தனர். ஆத்திர வேத்தில் உடலாலும், மனதாலும் அர்ப்பணிப்புக் கொண்டாடிய ஆற்றுகையாளர்களை கடலில் தூக்கி எறிந்தனர். கரையோர



வெளி அமளிதுமளியானது.

இதேபோன்று ஊறணியில் நடைபெற்ற ஊரக அரங்காலயத்திலும் - வேகங்கொண்டாடிய இளைஞர்கள் சுனாமி உருவான ஆற்றுகையாளர்களின் உருவை அடக்கி ஒப்பந்தம் செய்தனர்.

*அன்பான தமிழ் மக்களுக்கு - நான்*
*இலங்கை ஆமியாகவும்*
*இந்தியன் ஆமியாகவும் - இனி*
*அமெரிக்கன் ஆமியாகவும்*
*வரமாட்டன்*
*சுனாமியாகவும் வரமாட்டன்.*

இப்படிக்கு
T. சுனாமி
(துறைமுக அலை)

என இந்த ஒப்பந்தத்தை பிறிஸ்டல் போர்ட்டில் எழுதி ஒப்பமும் வாங்கிக் கொண்டனர் ஊரவர்கள். சிறுவர் முதல் பெரியவர் வரை உணர்வுடன் செயற்பட்டனர். அரங்காலயத்தில் இவர்கள் கொண்ட வேகமும், துடிப்பும் எந்த புதிய சூழலையும் நிதானத்துடன் எதிர் கொள்வோம் எனப் பறைசாற்றி நின்றது. ஊர் கூடி கொண்டாடினர்.

இப்படி ஊர் கூடுறது இப்ப இல்லைத் தம்பி. நெடுகவும் எங்கட பிள்ளைகள் இப்படிக் கூடி நின்டால் எங்களுக்குத் தானே சந்தோஷம். நான் தனிய இருந்து தான் வலை தெரியிறனான். இன்டைக்கு ஊரே சேர்ந்து நிற்க வேலை போறதே தெரியேலை? என்றார் 62 வயதுடைய பெரியவர்.

நீங்கள் நெடுக எங்களிட்ட வாங்கோ. என அந்தச் சமூகத்தினர் எதிர்பார்ப்புக் கொண்டனர்.

இன்று எமது சமூக சூழலில் ஊர் மக்கள் எல்லோரும் ஒன்று கூடுவதென்பது குறைந்து- குடும்பம், தனிநபர் எனத் தனித் தீவுகளாக எமது சமூகம் உருவாகின்ற இந்த நேரத்தில் சமூகத்தை ஒன்றிணைக்கவும், அதன் பலத்தை வெளிப்படுத்தவும் அரங்கினால் முடியும்.

எமது பண்பாட்டில் கோவில் வெளிகளில் நாம் ஒன்று கூடி, ஆடிப்பாடி மகிழ்ந்து உணர்வுகளால் பேசிப் பறைந்து வாழ்ந்த அந்த உண்மையான வாழ்க்கை - ஊர் கூடும் பண்பாடு உருவம் அற்றுப் போகின்ற எமது சமூகத்தில் அரங்கச் செயலாளிகளான எம்மால் அரங்கு என்ற சக்தி வாய்ந்த கருவி கொண்டு, அதன் பலமும் கொண்டு, மீள கண்டுபிடிக்க முடியும். இவ்வாறான சமூக செயற்பாட்டுக் களங்களை உருவாக்குவதன் மூலம் மானிட தேசத்தில் பால் அக்கறையுள்ள மானுட விடுதலை கொண்ட சமூகத்தை கட்டியெழுப்ப முடியும்.

வரலாறு

ஆர்.கே.மேனன்

# பௌத்த மதத்தின் தோற்றமும் சிங்கள தேசியவாதக் கலப்பும்

பௌத்த மதமானது இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலிருந்து சிங்கள அரசியல் ஈடுபாடுகளோடுதான் வளர்க்கப்பட்டது.

இந்த பௌத்த மதத்தை இனவாத போக்குகளுக்கு பயன்படுத்துவது இன்று நேற்று அல்ல, அன்று தொட்டே இருந்து வந்தது. பௌத்த மதம் - சிங்கள இனம்- இலங்கை என்ற மூன்றின் ஒருங்கிணைப்பே நாட்டில் ‘பௌத்த சிங்கள தேசியவாதம்’ என்ற கொள்கையை அறிமுகப்படுத்தியது.

*பௌத்த மதத்தின் சர்ச்சைக்குரிய தோற்றம்*

இந்த மதமானது - இலங்கையில் தோற்றம் பெற்ற வரலாறு ஆராய்ச்சியாளர் மத்தியில் பெரும் சர்ச்சைக்குரிய ஒன்றாக உள்ளது. இந்தியாவில் அசோகனது ஆட்சி நிலவுகின்றபோது இலங்கையில் பௌத்த மதம் பரப்பப்பட்டது. அதாவது கி.மு 265 ஆம் ஆண்டில் இந்த மன்னனது அட்சிக் காலத்தில் இடம் பெற்ற கலிங்கத்து போரினால் உண்டான கொடூரத்தைக் கண்டு மனம் கலங்கி தரும நெறிகளை உலகுக்கு உணர்த்த வேண்டும் என்ற அடிப்படையில் - பிராமண பௌத்த சமண தத்துவங்களில் சொல்லப்பட்ட தர்ம நெறிகளை எந்தவித மத சார்புமற்ற ரீதியில் தர்மகொள்கையாக மாத்திரம் உலகுக்கு உணர்த்த முற்பட்டு, தூதுக் குழுக்களை தென் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளுக்கு தர்மகொள்கை பரப்பும் தர்மவிஜயமாக அனுப்பி வைத்தான்.

இந்தக் காலப்பகுதியில் தேவ நம்பியதீசன் என்னும் மன்னன் இலங்கையில் ஆட்சி புரிந்தான். இவன் அசோகனால் அனுப்பட்ட தர்ம கொள்கையை ஆராய்ந்து ஏற்றுக் கொண்டான்.

இதன் விளைவாக இலங்கையிலும் தர்ம கொள்கை பரவலானது. எந்தவித மத சார்பும் இல்லாத பல தத்துவப் பிரிவின் தர்ம கொள்கையாக விளங்கிய இந்தக் கொள்கையை - சிங்களப் பெரும்பான்மை, பௌத்த தேசியவாத தோற்றத்துக்கு சாதகமாகப் பயன்படுத்தியது.

அதாவது, அசோக சக்கரவர்த்தி பௌத்த மதத்தைஇலங்கையில் பரப்பும் பொருட்டு பௌத்த துறவிகளை இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளான்என வரலாற்றையே இன்று மாற்றி வைத்திருக்கின்றனர். இதை மையமாக வைத்து பௌத்த தத்துவத்தை ஒரு மதமாக சிங்கள பேரினவாதம் மாற்றி வளர்க்கவே முற்பட்டது. ஆனால், இது மதம் என்ற மகிமையோடு நின்று விடவில்லை. மதப் பிரியர்களாகி, பின்பு மத வெறியர்களாகி, தற்போது இனவெறிக்கு பௌத்தம் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது இதுதான் உண்மை வரலாறு.

ஆனால், பௌத்தர்கள் போற்றுகின்ற மகாவம்சம் என்னும் நூலை எடுத்துக் கொண்டால் - அதில் புத்த பெருமான் மூன்று தடவை இலங்கைக்கு வந்ததாகவும், அப்போது இலங்கையில் இருந்த எண்பது கோடி மக்களை தனது போதனையால் வசப்படுத்தியதாகவும் கூறப்படுகிறது.

இது பற்றி H.PARKAR என்பவர் தனது ANCIENT CEYLON என்ற நூலில் இந்த மகாவம்ச கருத்தினை முற்றாக நிராகரிக்கிறார்.

இப்படிப்பட்டஎந்தக் கருத்துக்களும் வேறு எந்த பௌத்த நூல்களிலும் கூறப்படவில்லை. இது வெறும் மத பிரசாரங்களுக்கூடாகவும், இலங்கையிலுள்ள சில இடங்களை முக்கியப்படுத்துவதற்கூடாகவும் கூறப்படும் வார்த்தைகள் என்கிறார்.

அசோக மன்னனது கற்தூண்களில் பொறிக்கப்பட்ட வார்த்தைகள் மகா வம்சத்துக்கு முற்றிலும் மாறானது என வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். மகாவம்சம் - புத்த பெருமான் முத்தி அடைந்த அன்றே விஜயன் என்பவன் பௌத்த மதத்தின் காவலனாக இலங்கையில் காலடி எடுத்து வைத்து, பௌத்த மதத்தை இலங்கையில் பரப்பினான் என்று கூறுகிறது.

ஆனால், புத்தர் முத்தியடைந்து 218 வருடங்களின் பின்னர் அதாவது கி.மு 265 இல் அரசர்களின் செல்வாக்கால் பௌத்த மதம் வளர்ச்சி பெற்றது என்றால் மகாவம்சம் எத்தகைய தவறான கருத்தை வெளிப்படுத்தி நிற்கிறது என்பது இங்கு புலனாகிறது.

விஜயன் பௌத்த மதத்தின் காவலனாக பௌத்த மத்தை வளர்த்தான் என்ற மகாவம்சக் கருத்தை டொக்டர் -மழல சேகர மறுத்துக் கூறுகையில் - விஜயன் இலங்கைக்கு வரும் போது இலங்கையில் இந்து மதம் இருந்ததாகவும், இவன் இந்துமதத்தையே தழுவி இந்துக் கோயில்கள் பலவற்றை புனரமைத்தான் என்றும் கூறுகின்றார். அதே வேளை பௌத்தம் அன்று தொட்டு இனவாத போக்கின் கலப்படமாக இருந்தது என்பதற்கு ஆதாரமாக தற்போது அபயகிரி விகாரை இருக்கும் இடத்தில் முன்பு ஈஸ்வரன் கோயில் இருந்ததாகவும், அவற்றை அழித்து விகாரைகள் கட்டப்பட்டதாகவும் வரலாறு கூறுகின்றது.

இவ்வாறான பௌத்த மதம் தர்ம கொள்கையில் இருந்து உருவாகிய உண்மை வரலாற்றை மறைத்து பல வரலாற்றுச் சிக்கல்களை, சர்ச்சைகளை உண்டு பண்ணி இன்று வரலாற்றையே மாற்றி பௌத்தத்தை வர்ணிக்கிறது சிங்கள இனவாதம்.

*சிங்கள தேசியவாத கொள்கையின் பின்னணியில் பௌத்தம்*

வெறும் தர்மக் கொள்கைகளாக இந்தியாவில் வளர முற்பட்ட பௌத்த, சமண மதங்கள் இந்து மதத்தின் ஆணிவேர் அர்த்தங்களால் அடியோடு அறுக்கப்பட்டது.

சமய குரவர்களின் எழுச்சியும், சேர, சோழ, பாண்டியர்களின் எழுச்சியும், கலப்பினரின் வீழ்ச்சியும் சமண பௌத்த மதங்களை தோற்கடிக்க வைத்து- சைவ, வைஷ்ணவ மதங்கள் தழைத்தோங்கலாகின. இதனால் தென் இந்தியாவில் இருப் பிடம் இழந்த பௌத்தம் - இலங்கையில் தன் இருப்பிடத்தை தக்கவைக்க பல முயற்சிகளை மேற்கொண்டது. இதன் அடிப்படையில் பௌத்தத்தை பாதுகாக்க மேற்கொண்ட முயற்சியே சிங்கள- தமிழ் வேறுபாட்டை ஏற்படுத்தியது. அந்தக் காலப் பகுதியில் இலங்கையில் இருந்த இந்து மதத்தின் குருமார்களோடும், இந்துமத வளர்ச்சி நிறுவனங்களோடும் போரிட்டு பௌத்தத்தை வளர்க்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இது சிங்கள பௌத்த தேசியவாதம் என்ற கொள்கையை உருவாக்கும் அளவுக்கு வலுப்பெற்று வளர்ச்சியடைந்தது. இந்த வளர்ச்சி பின்பு சிங்கள பெரும்பான்மை பாராளுமன்ற ஆட்சியாளர் வர்க்கங்களால் இனவாத களப்போடு வளர்க்கப்பட்டது.

பெரும்பான்மை இனம் பௌத்த - சிங்களம் என்பதனால் தமிழினத்தை ஒடுக்கும் இனவாத கலப்புகளுக்கும் பௌத்தம் பயன்பட்டது. இதன் அடிப்படையில் தான், இன்றைய இனவாத புத்தர் சிலை விவகாரங்கள் எல்லாம் தோற்றம் பெறுகின்றன.

# லண்டனில் சுட்டுக்கொல்லப்பட்டவர் பிரேசில் நாட்டு அப்பாவி இளைஞர்!



லண்டன் —

லண்டனில் கடந்தவியாழன் 3 சுரங்க ரயில்பாதைகள் மற்றும் பஸ் ஒன்றின் மீது நடத்தப்படவிருந்த குண்டுத்தாக்குதலுடன் தொடர்புடையவரென நினைத்து மறுநாள் வெள்ளிக்கிழமை லண்டன் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்ட நபருக்கும் குண்டுத்தாக்குதல் முயற்சிக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

சுட்டுக்கொல்லப்பட்டவர் பிரேசிலைச் சேர்ந்த ஜீன் சார்லஸ் டி மெனிசஸ் (வயது27) எனவும் இவர் லண்டனில் இலத்திரனியல் தொழில் செய்பவரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மெனிசஸ் தெற்கு லண்டனிலுள்ள பிறிக்ஸ்ரன் நகரில் வசித்து வருபவரெனவும் இவருக்கும் குண்டுவெடிப்பிற்கும் எவ்வித தொடர்பும் இல்லையெனவும் ஸ்கொட்லான்ட் யாட் தெரிவித்துள்ளது. அத்துடன் இந்தச் சம்பவங்களால் சிலர் தமது வாழ்வை இழக்க வேண்டிய நிலை ஏற்படுவதாகவும், இதற்காக மெற்றோ பொலிற்றன் பொலிஸ் சேவை மிகவும் துயரடைவதாகவும் தெரிவித்துள்ளது.

தமது நாட்டுப் பிரஜை கொல்லப்பட்டதையிட்டு பிரேசில் அரசாங்கம் அதிர்ச்சி தெரிவித்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக சரியான விளக்கத்தை பிரிட்டன் தரவேண்டுமென பிரேசில் வெளியுறவு அமைச்சர் செல்சோ அமோறிம் - பிரிட்டிஷ் வெளியுறவு செயலர் ஜக்சிரோவைக் கேட்டுள்ளார்.

மெனிசஸ், பொலிஸாரிடமிருந்து பாதுகாப்பு தேடுவதற்காகவே ஓடியுள்ளார். அந்தநேரமே அவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இதன் மூலம் அரசின் தவறான செயற்பாடு உறுதிப்படுத்தப்படுகிறதென லண்டனில் வசிக்கும் மெனிசஸ்ஸின் உறவினர் பெரீரா தெரிவித்தார்.

அத்துடன் இவர் இயல்பாகவே அனைவருடனும் பழகும் தன்மை கொண்டவரெனவும், இவர் எவ்விதத்திலும் பயங்கரவாத செயற்பாட்டில் தொடர்புபட்டிருக்கமாட்டாரெனவும் அவர் தெரிவித்தார்.




# லெபனானில் கார்க் குண்டுவெடிப்பு; பலர் காயமடைந்ததாகத் தகவல்!

பெய்ரூட் —

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் இடம்பெற்ற கார்க் குண்டு வெடிப்பில் பலர் காயமடைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் குண்டு வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரின் அடிப்பாகத்தில் பொருத்தப்பட்டிருந்ததாக லெபனான் உள்துறை பாதுகாப்பு பொறுப்பதிகாரி ஜெனரல் அஷ்ரப் றிபி தொலைக்காட்சி உரையில் தெரிவித்தார்.

குண்டுவெடித்த இடம், விடுதிகள், இரவு கேளிக்கை விடுதிகள் பலவற்றைக் கொண்ட பகுதியாகும். அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொண்டோலீசா ரைஸ், உத்தியோகபூர்வமற்ற விஜயமாக இந்த நகரத்திற்கு வந்துசென்ற ஒரு மணி நேரத்தின் பின்னர் இந்தக் குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் குண்டு வெடிப்பில் ஒருவர் கொல்லப்பட்டும், ஏழு பேர் காயமடைந்ததாகவும், முன்னைய தகவல்கள் தெரிவித்தன. இந்தப் பாரிய குண்டு வெடிப்பால் கார் முற்றாகச் சேதமடைந்துள்ளதாக பி.பி.ஸியின் செய்தி யாளர் சிம் கற்றாஸ் தெரிவித்தார்.

யாரை இலக்கு வைத்து இந்தக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதென தெரியாதுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த வருடத்திலிருந்து சிரிய எதிர்ப்பாளர்களை இலக்குவைத்து லெபனானில் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# ஜப்பானில் பூமியதிர்ச்சி 18 பேர் காயமடைந்தனர்!

டோக்கியோ —

ஜப்பானில் 6 ரிக்டர் அளவில் பூமியதிர்ச்சி ஏற்பட்டதனால் ரோக்கியோ நகரம் குலுங்கியது. இந்தச் சம்பவத்தில் 18 பேர் காயமடைந்தனர்.

ஜப்பான் தலைநகர் ரோக்கியோ மற்றும் பகுதிகளில் நேற்றுமுன்தினம் அதிர்ச்சி ஏற்பட்டது. இது 6 ரிக்டர் அளவில் பதிவாகியிருந்தது.

இதனால் ரோக்கியோ நகரிலுள்ள கட்டங்கள் அதிர்ந்தன. அச்சமடைந்த மக்கள் வீட்டைவிட்டு வெளியேறினர்.

இந்தப் பூமியதிர்ச்சியில் 18 பேர் காயமடைந்தனர். இவர்களில் 5 பேர் பெண்கள்.

இந்த நில நடுக்கம் காரணமாக ரயில் போக்குவரத்துக்கள் மற்றும் வீதிப் போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டன. விமான நிலையங்களும் சில மணிநேரம் மூடப்பட்டன.

இந்தப் பூமி அதிர்ச்சியால் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை.

இதன் தொடர்ச்சியாக சுனாமி தாக்குதல் ஏற்பட வாய்ப்பு இல்லை என்று புவியியல் ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது. இருந்தபோதிலும் அடுத்த சில நாட்களுக்கு பூமி அதிர்ச்சி ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# சிறைக் கைதியின் உணவில் மனிதக் கைவிரல் துண்டு!

ஷான் பிரான்ஸிஸ்கோ —

அமெரிக்காவிலுள்ள சிறையில் பிலிப்ரோசா என்பவர் கைதியாக உள்ளார். இவர் சைவ உணவு சாப்பிடுபவர். இந்த நிலையில் அவருக்கு வழங்கப்பட்ட உணவில் மனிதக் கைவிரல் கிடந்தது. இதனைக் கண்டு அதிர்ச்சி அடைந்த பிலிப்ரோசா அது முதல் உணவு சாப்பிடமுடியாமல் அவதிப்பட்டார். இதனால் அவருடைய நிறை 7 கிலோ குறைந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. தனியார் நிறுவனம் ஒன்று கைதிகளுக்கான உணவை பாக்கெட்டில் அடைத்து விநியோகம் செய்து வருகிறது. கை விரல் விவகாரம் அம்பலமாகவே அந்த நிறுவனம் அதற்காக வருத்தம் தெரிவித்தது.

ஆனால் அதை பிலிப் ஏற்றுக்கொள்ளவில்லை. ரூ93 லட்சம் நஷ்டஈடு கோரி நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்திருக்கிறார். ஏற்கனவே ஒரு ஹோட்டலில் வழங்கப்பட்ட உணவில் மனித விரல் கிடந்ததாக கலிபோர்னிய நீதிமன்றில் வழக்கு விசாரணையில் இருந்து வருகிறது. இதற்கிடையில் தற்போது மற்றொரு விவகாரம் வெளிவந்துள்ளமை பலரை அதிர்ச்சியடைய செய்துள்ளது.

## பின்லேடனைப் பிடிக்கும் சாட்டில்

# பாகிஸ்தானுள் வெளிநாட்டுப் படைகளை அனுமதிக்க முடியாதென்கிறார் முஷாரப்!



நியூயோர்க் —

பாகிஸ்தானில் பின்லேடனைத் தேட எந்த நாட்டையும் அனுமதிக்க மாட்டோம் என முஷாரப் தெரிவித்துள்ளார்.

பின்லேடனை அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் தேடி வருகின்றன. அவர் பாகிஸ்தானில் இருப்பதாகவும், ஆப்கானிஸ்தானில் இருப்பதாகவும் முரண்பட்ட தகவல்கள் கூறுகின்றன.

அமெரிக்காவில் இரட்டைக் கோபுர வளாகம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது மற்றும் லண்டனில் சமீபத்தில் நடந்த தொடர் குண்டுவெடிப்புக்கள் உட்பட பல பயங்கரவாதச் செயல்களை அவர் தலைமறைவு வாழ்க்கையை நடத்தியபடி செய்திருக்கிறார். அவரது அல் - கொய்டா இயக்கமும் இந்தச் சம்பவங்களுக்குப் பொறுப்பு ஏற்பதாக அறிவித்துள்ளது. ஆகவே அவர் தீவிரமாகத் தேடப்பட்டு வருகிறார்.

அமெரிக்காவின் உளவுப் பிரிவான சி.ஐ.ஏயின் தலைவர் போர்ட்டர் கோஸ் சமீபத்தில் ஒரு பேட்டியில் ஒசாமா பின்லேடன் பற்றிய தகவலை வெளியிட்டிருந்தார்.

பின்லேடன் எங்கே இருக்கிறார் என்பது பற்றி அமெரிக்காவுக்கு நல்ல தகவல் கிடைத்துள்ளது. ஆனால் அதிகாரப் பிரச்சினையால், ஆட்சி நிர்வாகப் பிரச்சினையால் அவரைக் கைது செய்து நீதியின் முன்கொண்டு வந்து நிறுத்துவதில் சிக்கல் உள்ளது எனத் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப் கூறியுள்ளதாவது -

ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானில் தங்கியிருந்தால், அவரை நாங்களே கைதுசெய்வோம். அதற்கான திறமை எங்களிடம் உள்ளது. அவர் இங்கு இருப்பதாக துப்புக் கிடைத்தால் நாங்களே அவரைப் பிடிப்போம்.

ஆனால் பின்லேடனைப் பிடிக்கிறோம் என்று கூறிக்கொண்டு எந்த நாடாவது அவரைத் தேடிக்கொண்டு பாகிஸ்தானுக்குள் வந்தால் அதை நாங்கள் அனுமதிக்கமாட்டோம்.

பின்லேடன் ஆப்கானிஸ்தானில் இருக்கிறார் என்று அமெரிக்கா கண்டுபிடித்திருப்பதாக எமக்கு தெரியவந்துள்ளது. எங்களது உளவுப் பிரிவினர் பின்லேடனைப் பிடிப்பது தொடர்பாக அமெரிக்காவின் உளவுப் பிரிவுடன் நல்ல உறவு வைத்திருப்பதுடன் நெருக்கமாகச் செயற்பட்டும் வருகின்றனர்.

பின்லேடன் உயிருடன் இருப்பதாக நம்புகிறேன். ஆனால் அவர் பாகிஸ்தானில் இருப்பதாகத் தெரியவில்லை. அவர் பாகிஸ்தானுக்கும், ஆப்கானிஸ்தானுக்கும் இடையில் எல்லைப் பகுதியில் இருக்கவேண்டும் என்று நினைக்கிறேன் என்று தெரிவித்தார்.

# 400 கோடி ஆண்டுகளாக உறைநிலையில் செவ்வாய்!

செவ்வாய்க் கிரகம் கடந்த 400 கோடி ஆண்டுகளாக உறைந்து கிடக்கிறது. அங்கு உயிரினங்கள் தோன்றுவதற்கான வெப்பச் சூழ்நிலை இருந்திருக்கமுடியாது என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

செவ்வாய்க் கிரகத்தில் இருந்து பெயர்ந்து விழுந்த இரண்டு எரிகற்களை அமெரிக்காவைச் சேர்ந்த பெஞ்சமின் வெயிஸ் அவருடைய மாணவர் டேவிட் கஷ்டர் ஆராய்ச்சி செய்துள்ளனர். மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப மையத்தில் துணை பேராசிரியராக பெஞ்சமின் உள்ளார். செவ்வாய் எரிகற்களை ஆராய்ச்சி செய்ததன் மூலம் கிடைத்த தகவலை அறிவியல் பத்திரிகையில் கட்டுரையாக வெளியிட்டுள்ளார்.

தற்போது உறைந்த நிலையில் உள்ள செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் தோன்றக் கூடிய அளவுக்கு ஒரு காலத்தில் வெப்பநிலை இருந்திருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கூறிவருகின்றனர். பெஞ்சமின் கருத்து இந்தக் கொள்கையை கேள்விக்குறியாக்கியுள்ளது. கட்டுரையில் பெஞ்சமின், கஷ்டர் கூறியுள்ளதாவது-


செவ்வாய்க் கிரகத்தில் இருந்து நூறு அல்லது நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் பெயர்ந்து பூமியில் விழுந்த இரண்டு எரிகற்களை ஆராய்ந்தோம். இதன் மூலம் செவ்வாய் கிரகம் கடந்த 400 கோடி ஆண்டுகளாக உறைந்து கிடக்கிறது என்பது தெரிய வந்துள்ளது. உயிரினங்கள் தோன்றுவதற்கு தேவையான மித வெப்பநிலையில் செவ்வாய்க் கிரகம் எப்போதும் இருந்திருக்க வாய்ப்பில்லை.

செவ்வாய்க் கிரகத்தில் இருந்து இந்த எரிகற்கள் பெயர்ந்து விழுந்த போது, நீரின் கொதிநிலைக்கு மேல் அவற்றில் வெப்பம் இருந்திருக்க முடியாது. குறிப்பிட்ட வெப்பநிலைக்கு மேல் பாறைகளில் இருந்து ஆர்கன் என்ற வாயு வெளியாகும். எரிகற்கள் மிகவும் குளிர்ந்த நிலையில் இருப்பதால் அவற்றில் அதிகளவு ஆர்கன் வாயு இருக்கக்கூடும்.

எரிகற்களில் இருந்து குறைந்த அளவு ஆர்கன் வாயு வெளியாகி இருக்கிறது. இது ஒரு குறிப்பிடத்தக்க அம்சம். இவற்றை ஆராய்ந்ததன் மூலம் மிக நீண்டகாலம் இவை குளிர்ந்த நிலையில் இருந்திருக்கின்றன என்பது புலனாகிறது. பூமியில் அறை வெப்பத்துக்கும் குறைவாக நீண்ட காலத்துக்கு ஒரு பாறைகூட இருக்காது. அப்படிப்பட்ட பாறையை காண்பதும் கடினம்.

செவ்வாயில் வெப்ப நீரூற்றுகள், குளங்கள் அல்லது திரவ கசிவுகள் இருக்கிறதா என்று ரோவர் ஆராய்ந்து வருகிறது. எங்கள் கருத்தின் மூலம் - அது நேரத்தை வீணாக்கிக் கொண்டிருப்பதாக அர்த்தமில்லை. தரைதளத்துக்குக் கீழ் ஏற்படும் புவி வெப்பநிலைச் செயற்பாடுகள், உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ற சிறிய பகுதிகளை செவ்வாயில் உருவாக்கி இருக்கக் கூடும் என அந்த கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

# ஜெமனில் தொடரும் ஆர்ப்பாட்டம் படையினரின் தாக்குதலில் 36 பேர்பலி!




ஜெமன் —

எரிபொருள் விலை அதிகரிப்புக் கெதிராக ஜெமன் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம் பெற்றுவரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும், படையினருக்குமிடையே இடம்பெற்ற மோதல்களில் 36 பேர் உயிரிழந்ததாக பொலிஸார் மற்றும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்த இராணுவ தாங்கிகள் வீதிகளில் நிறுத்தப்பட்டுள்ளன. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோர் வீதிகளில் ரயர்களைப் போட்டு எரிப்பதுடன் அரச நிறுவனங்கள் மீதும் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

எட்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் கடந்த வியாழக்கிழமை குடேடா நகரத்திலும், மற்றைய இருவர் அடென் நகரத்திலும் கொல்லப்பட்டதாகப் பொலிஸார் ஏ.பி. செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தனர். வட பகுதி நகரான சாடாவில் இருவர் கொல்லப்பட்டதாகவும், இவர்கள் இருவரும் படையினரெனவும் தெரிவிக்கப்படுகிறது. இதனைவிட சனா என்ற நகரத்திலும் ஒருவர் கொல்லப்பட்டார்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் 12 வயதுச் சிறுவன் உட்பட 13 பேர் உயிரிழந்தனர்.

எரிபொருள் விலையேற்றத்துக்கான ஆர்ப்பாட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகையில், மக்கள் அனைவரையும் அமைதியாக இருக்குமாறு பிரதமர் அப்துல் காதிர் தெரிவித்துள்ளார்.

அராபிய உலகில் ஜெமன் மிகவும் வறிய நாடென்பது குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# பரவலான கோஷ்டி மோதல்கள்; நேற்று மட்டும் எட்டு பேர் காயம்!

யாழ்ப்பாணம் —

வடமராட்சிப்பகுதியில்நேற்று இடம் பெற்ற இருவேறு கோஷ்டி மோதல் சம்பவங்களில் ஆறு பேர் காயமடைந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் நெல்லியடிச் சந்தியில் இரு குழுக்கள் வாள், கத்தி, பொல்லுகள் என்பவற்றுடன் மோதலில் ஈடுபட்டன.

இதில் மூன்று பேர் படுகாயமடைந்தனர். இந்த மோதலில் ஈடுபட்ட இருவரை நெல்லியடி பொலிஸார் கைது செய்த பின்னர் இன்று மாலை பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு கூறி விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை, நேற்று மாலை 5.30 மணியளவில் அல்வாய் முத்துமாரியம்மன் கோவில்பகுதியில் ஏற்பட்ட கோஷ்டி மோதலில் மூவர் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.


அல்வாய் முத்துமாரி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த உதயகுமார் (வயது26), யுவதீஸ்வரன் (வயது19), சற்குணராசா (வயது37) ஆகிய மூவருமே காயமடைந்தவர்களாவர்.

இதேவேளை, இணுவில் மஞ்சத்தடிப் பகுதியில் இரண்டு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் படுகாயமடைந்த இருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது. மீசாலையைச் சேர்ந்த சி.சுதந்தன் (வயது 29), ப.சசிகுமார் (வயது 30) ஆகிய இருவருமே இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்கள் இணுவில் மஞ்சத்தடிப் பகுதியில் மரம் தறிக்கச் சென்ற போதே மேற்படி மோதல் ஏற்பட்டதாகவும், மோதலில் ஈடுபட்டவர்கள் கத்தி, வாள் போன்றவற்றைப் பயன்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (12)

## கூட்டுப்படைத் தளபதி பதவியில் சந்தகிரி தொடர்வது சந்தேகமே?



கொழும்பு —

எதிர்வரும் ஒகஸ்ட் 31 ஆம் திகதியுடன் கடற்படைத் தளபதி பதவியிலிருந்து வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி ஓய்வுபெறவுள்ளார் என்றும் - அவர் தொடர்ந்து கூட்டுப்படைகளின் தலைமையதிகாரி பதவியில் இருப்பாரா என்பது குறித்தும் சந்தேகம் கிளப்பப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது -

கடந்த வெள்ளிக்கிழமை பிராந்திய கடற்படைத்தளபதிகள் மற்றும் கடற்படை சிரேஷ்ட அதிகாரிகளுடன் கடற்படைத்தலைமையகத்தில் வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி மாநாடு ஒன்றினை நடத்தினார்.

இதுவேதான் கடற்படைத்தளபதி பதவியில் இருந்துகொண்டு நடத்தும் இறுதியான மாநாடு என்றும், ஒகஸ்ட் 31ஆம் திகதிக்குப் பின்னர் புதியதொரு கடற்படைத்தளபதி தனது இடத்துக்கு நியமிக்கப்படுவாரென்றும் இங்கு உரையாற்றியபோது - தெரிவித்த வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி -

அடுத்த கடற்படைத் தளபதி யார் என்பது குறித்து எதுவும் கூறவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், தற்போதைய கடற்படைத் தலைமை அதிகாரியான றியர் அட்மிரல் மொகான் விஜேவிக்கிரமவே இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுவாரென்றும், தலைமையதிகாரியாக றியர் அட்மிரல் வசந்த கரன்னகொட நியமிக்கப்படுவார் என்றும் தெரியவருகிறது.

கடற்படைத்தளபதி பதவியிலிருந்து வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி ஓய்வுபெற்றாலும், கூட்டுப்படைத்தளபதி பதவியில் இவர் தொடர்வாரா என்பது குறித்து இன்னமும் தெளிவான தகவல் ஏதும் வெளியாகவில்லை.

### நிக்கோபார்...

யாகாவிலும், சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாக இந்தியத் தொலைக்காட்சிகள் அறிவித்ததில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

சில இடங்களில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்தனர். எனினும் பின்னர் சுனாமி அச்சுறுத்தல் இல்லையென இந்திய அரசு அறிவித்தது.

இதேவேளை - இந்தோனேஷியா, தாய்லாந்து, ஜப்பான் உள்ளிட்ட கிழக்காசிய நாடுகளிலும் சுனாமி ஏற்படலாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்ட போதும், இந்தச் செய்தி எழுதப்படும் வரை எங்கும் சுனாமித் தாக்கம் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### ரஷ்யாவிடம்...

இதேவேளை அண்மையில் சீனாவிடமிருந்து மூன்று நவீனரக கே-8 பயிற்சி விமானங்களையும் விமானப்படை கொள்வனவு செய்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## விசேடசெயற்திட்டத்திற்காகவே கபில வெளிநாடு அனுப்பப்பட்டார்!

### சண்டேரைம்ஸ் தெரிவிப்பு

இராணுவப் புலனாய்வுப்பிரிவின் பணிப்பாளர் நாயகமான மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண - விசேட செயற்திட்டமொன்றுக்காகவே ஜனாதிபதி சந்திரிகாவால் வெளிநாட்டுக்கு அனுப்பப் பட்டிருப்பதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கபிலஹெந்தவிதாரணவை வெளிநாட்டில் விசேட செயற்திட்டம் ஒன்றுக்கு ஜனாதிபதி அனுப்பிய போதிலும் அது என்ன பணி எனத் தெரிவிக்கப்படவில்லை. இதற்காகவே ஹெந்த விதாரண வெளிநாடு சென்றுள்ளார். இவர் நாடு திரும்பும் வரை இவரது முன்னைய பணியை தேசிய புலனாய்வுப் பணியகத்தின் தலைவரான மேஜர் ஜெனரல் சூலசெனிவிரத்ன கவனித்துக் கொள்வார்.

இதேவேளை, கபில ஹெந்த விதாரண இராணுவ புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் பதவியிலிருந்து அகற்றப்பட்டதாக கடந்த வியாழக்கிழமை வெளியிடப்பட்ட செய்தி வெறும் வதந்தியே எனவும் அந்தப் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருகோணமலையில் கைதாகிய இளைஞர்கள் விளக்கமறியலில்!

திருகோணமலை —

கந்தளாய் பொலிஸ் நிலையத்தை உளவு பார்த்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மூன்று தமிழ் இள்ளைஞர்களையும் எதிர்வரும் 5 ஆம்திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிவான் ரங்கதிஸநாயக்க கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

மூதூர் - ஆலங்கேணி மற்றும் ஈச்சிலம்பற்று ஆகிய இடங்களை வசிப்பிடமாகக் கொண்ட கோபாலபிள்ளை யோகதாசன் (வயது 21), மயில் வாகனம் சுதாகரன் (வயது 22), சிவாகரன் நிலாதாசன் (வயது 17) ஆகிய மூவருமே விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களாவர்.

கந்தளாய் பொலிஸ் நிலையத்திற்கருகில் சந்தேகத்திற்கிடமான முறையில் இம் மூவரும் நடமாடியதாகவும், இவர்கள் பொலிஸ் நிலையத்தை உளவு பார்க்கவந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (தே)

## கட்சித் தலைமைப் பதவியை...

மன்றத் தேர்தலில் ஜே.வி.பியினருக்கு எமது ஆசனங்களை விட்டுக் கொடுத்திருக்கிறோம்.

இந்தக் கூட்டமைப்பு உருவாக்குவது தொடக்கத்திலிருந்தே எனக்கு விருப்பம் இல்லைத்தான் இது தொடர்பாக மிகச்சிறிய அளவில்தான் நான் ஆலோசனை நடத்தியிருக்கிறேன். ஆனால், நமது கட்சியைச் சேர்ந்த சிலர் எனது இல்லத்துக்கு வந்து இரவும் பகலுமாக என்னிடம் வலியுறுத்தி நாடாளுமன்றத்தைக் கலைக்க வைத்தனர். அவர்கள்தான் என்னை ஜே.வி.பியுடன் அணி சேரத் திணித்தனர்.

நான் அவர்களுக்கு அப்போதே விளக்கினேன். இது நம் கட்சிக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்று கூறினேன். ஆனால், இந்தக் கட்சியின் வரலாற்று ரீதியான உணர்வுகளைப் புரிந்துகொள்ளாமல் நமது கட்சியில் சில சக்திகள்தான் இந்தக் கூட்டமைப்பை உருவாக்க ஆர்வம் காட்டின.

இவர்கள் அனைவரும் அரச அதிகார லாபங்களைப் பெறவிரும்புபவர்கள். சொந்தக் கட்சியையே காட்டிக் கொடுத்தவர்கள் இவர்கள்.

ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளில் நடந்தது என்ன? அமைச்சுப் பொறுப்பிலிருந்த ரவி மற்றும் ராஜித போன்றவர்கள் ஒழுக்கம் கெட்ட முறையில் என்னை ஏசினார்கள். கடைசியில் விமல் வீரவன்சவும் என்னைத் தாக்கிப் பேசினார்.

நாடாளுமன்றத் தேர்தலின் போது - என்னிடம் மண்டிபோட்டு ஆசனங்களை பிச்சைபெற்று நமது வாக்குகளைக் கொண்டு நாடாளுமன்றத்தில் நுழைந்தவர்தான் இந்த விமல் வீரவன்ச.

இனியும் இவர்களது தொல்லையை அனுமதிக்க முடியாது என்ற நிலையில் நான் மேற்கொண்ட முடிவால் அரசிலிருந்து அவர்கள் வெளியேறினர். அவர்கள் வெளியேறிய போதும், அரசு கவிழ்ந்து விடவில்லை.

மீண்டும் கூட்டமைப்பை உருவாக்க நான் அவர்களிடம் பிச்சை எடுக்கப்போவேன் என்று அவர்கள் கருதி இருந்தார்கள். ஆனால், அரசும் கவிழவில்லை. அரசு கவிழவே கவிழாது என்று சொன்னேன்.

ஒவ்வொரு மலரும் கடவுளுக்குச் செலுத்தப்படலாம். ஆனால், மலர்கள் கடவுளாகிவிட முடியாது. அதைப் போலவே நாட்டின் அரச தலைவர் பதவியும். நானே கட்சித்தலைவர் - இன்றும் நாளையும் நானே கட்சித் தலைவர்.

நாட்டின் அரச தலைவர் வேட்பாளரை நானே தேர்வு செய்வேன். கட்சி என்னும் கூடையிலுள்ள மலர்களில் எது உகந்ததோ அதை நானே தேர்ந்தெடுப்பேன். மிகவும் நேர்மையான மனிதருக்கே அந்தப் பதவி கொடுக்கப்படும்.

நாட்டில் மக்கள் பணத்தைத் திருடுகிறவர்கள், மக்களைக் கொலை செய்பவர்கள் கண்டுபிடிக்கப்படுவார்கள். அவர்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்புக்கு வரஇயலாது.

அரசியலில் நாங்கள் பாரிய தியாகங்களைச் செய்துள்ளோம். இந்தக் கடசியின் தலைமைப் பொறுப்புக்கு வருபவர் ஊழலற்ற நேர்மையாளராக இருக்க வேண்டும்.

ஜே.வி.பியுடன் ரகசிய சதித்திட்டம் எனக்கு எதிராகத் தீட்டப்படுகிறது. இது குறித்த ரகசியப் பேச்சுக்களும் நடைபெறுகின்றன. அது ஒருபோதும் நடக்காது அவர்களது கூட்டணி வெற்றியடையாது என அவர் மேலும் தெரிவித்தார்.

## புலிகளின் வான் தாக்கு...

கான திட்டங்கள் மற்றும் போர்த் தளபாடங்கள் குறித்தும் பயிற்சி நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்ந்திருக்கிறது.

விமானப்படையின் திட்டமிடல் இயக்குநர் எயார் வைஸ் மார்ஷல் சன்ன குணரட்ண தலைமையிலான இந்தக் குழுவில் - நடவடிக்கை இயக்குநர் எயார் கொமடோர் றொசான் குணதிலக, சீனன்குடா விமானப் படைத் தளபதி குறூப் கப்டன் ஹகன் புலத்சிங்கள, இயந்திரவியல் மற்றும் தொலைத் தொடர்புப் பிரிவு கட்டளை அதிகாரி குறூப் கப்டன் றொகான் பதிரகே, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய கட்டளை அதிகாரி குறூப் கப்டன் விஜித குணரட்ண ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இவர்கள் இந்திய விமானப்படைத் தளபதி எயார் சீப் மார்ஷல் சகிந்த பால் தியாதி மற்றும் உயர்மட்ட அதிகாரிகளைச் சந்தித்துப் பேசியிருந் த னர்.

அத்துடன், இந்திய விமானப்படையின் பிரதான வான் பாதுகாப்பு வசதிகளைக் கொண்ட தளமான லக்னோவுக்குச் சென்று வான் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் அங்கு பணியாற்றுபவர்கள் எப்படிப் பயிற்றுவிக்கப் பட்டுள்ளனர் என்பது குறித்தும் ஆராய்ந்தனர்.

அத்துடன், ராஜஸ்தானில் உதேர்லைனில் வான் பாதுகாப்புக் கருவிகள் மற்றும் ராடர்களை இவர்கள் ஆராய்ந்ததுடன், பெங்களூரில் உள்ள ஜலன்னில் இந்திய விமானப்படையின் பாரிய பயிற்சிப் பிரிவையும் பார்வையிட்டிருந்தனர்.

இங்கேயே விமானப்படையைச் சேர்ந்த 20 பேர் அனுப்பப்பட்டு பல்வேறு வகையான வான் பாதுகாப்புப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதில், இலத்திரனியல் மற்றும் மின்னியல் கற்கைநெறிகளும் உள்ளடங்குகின்றன என்றும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

## தமிழர் தாயகத்துக்கு...

அவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை. இனிமேல் இதை இழுபட விடமுடியாது.

இயற்கைப் பேரழிவு, யுத்தம் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட மக்களின் அவலங்களைப் போக்குகிற தார்மீகப் பொறுப்பும், கடமையும் சர்வதேச சமூகத்துக்கு உண்டு.

விரைந்து செயற்படவேண்டிய இந்தப் பணியை இனிமேலும் தாமதித்தால், சர்வதேச சமூகம் பெரும் மனிதாபிமானப் பிரச்சினை ஒன்றில் தனது பொறுப்பைத் தட்டிக் கழித்துப் பெரும் தவறு இழைத்ததாகவே அது அர்த்தமாகும்.

அந்தத் தவறைச் செய்யாதிருக்கும்படி சர்வதேச சமூகத்தை வேண்டுகின்றோம்.

பொதுக்கட்டமைப்பு இயங்க மாட்டாது என்றால், சுனாமியால் பாதிப்புற்ற மக்களுக்கான மனிதாபிமான உதவிகளோடு, சர்வதேச நிதி என்பன தமிழர் தாயகத்துக்கு நேரடியாகக் கிடைக்கக் கூடிய ஏற்பாடுகளைச் சர்வதேச சமூகம் இனிமேலும் காலம் தாமதிக்காமல் விரைந்து செய்ய வேண்டும் என அவர் மேலும் கோரிக்கை விடுத்தார்.

லண்டனில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் - நோர்வே தூதுக்குழுவின் சார்பில் எரிக் சொல்ஹெய்மும், இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## படையினரை உஷார் நிலையில்...

நடமாட்டத்துக்கான பாதுகாப்புத் தொடர்பாகவோ அரசாங்கம் இறுக்கமான போக்கை கடைப்பிடித்து வரும் நிலையிலேயே இராணுவத்தளபதியின் இந்த விஜயம் இடம்பெற்றிருக்கிறது.

நேற்று முன்தினம் சிரேஷ்ட படை அதிகாரிகளுடன் விமானம் மூலமாக வவுனியா விமானப் படைத்தளத்திற்கு வந்த இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொடவை - வன்னி பாதுகாப்புத் தலைமையக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பி.எஸ்.பி. குலதுங்க வரவேற்றார். வன்னி இராணுவத் தலைமையகத்தில் இடம் பெற்ற அணி வகுப்பு மரியாதையைத் தொடர்ந்து அங்கு உயர் மட்ட பாதுகாப்பு மாநாடு ஒன்று இடம்பெற்றது.

இந்த இரகசிய மாநாட்டில் வவுனியாவில் நிலைகொண்டுள்ள 21 ஆவது டிவிசன் மற்றும் 56 ஆவது டிவிசன் ஆகியவற்றின் கட்டளை அதிகாரிகளும் இவற்றின் கீழ் உள்ள பிரிகேட்தளபதிகள், யுனிட் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் தற்போதைய பாதுகாப்புநிலை குறித்து விரிவாக ஆராயப்பட்டதாகவும் போர்நிறுத்த உடன்பாடு கேள்விக்குள்ளாகிவரும் நிலையில் படையினரை எந்த நேரமும் தயார் நிலையில் வைத்திருக்குமாறும் படை அதிகாரகளுக்கு இராணுவத்தளபதி உத்தரவிட்டதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

அத்துடன், ஓமந்தை உள்ளிட்ட முன்னணிப் பாதுகாப்பு நிலைகளின் நிலமைகளையும் நேரில் அவதானித்த இராணுவத் தளபதி - படை அதிகாரிகளுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக ஆலோசனைகளைத் தெரிவித்தாகவும் -

படையினரைச் சந்தித்து அவர்கள் மத்தியில் உரைநிகழ்த்தியதாகவும் தெரியவருகிறது.

இதன் பின்னர் ஹெலிகொப்டர் மூலமாக மன்னாருக்குச் சென்ற இராணுவத் தளபதியை மன்னார் பிராந்திய இராணுவ தலைமையகத் தளபதி பிரிகேடியர் என்.எம்.டி. ராஜபக்ஷ வரவேற்று - அங்குள்ள பாதுகாப்பு நிலைமைகளை விளக்கிக் கூறியதுடன் நேரிலும் காண்பித்தார்.

இராணுவத் தளபதி உள்ளிட்ட சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளின் இந்த விஜயம்,படையினரை உற்சாகப்படுத்தி போருக்கு தயார் நிலையில் வைத்திருப்பதும் , முக்கிய பாதுகாப்பு நிலைகளின் பலம் குறித்து பரிசோதனை செய்வதுமே என்று தகவல்கள் தெரிவித்தன.

ஜூலை 15 முதல் ஒகஸ்ட் – 15 வரை என்றும் இல்லாத வகையில் அசத்தலான தள்ளுபடி 25% வரை
இன்றே விரையுங்கள்...
ஓசானிக் இம்பெக்ஸ்
192, பிரதான வீதி, கொழும்பு – 11.
T.P.011 - 2336720, 011 - 2327168

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.07.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.